வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959 Reg. No. : P . 1632 விலை ரூ. 30/=

# ஈழநாடு
Eelanadu ඊළනාඩු



மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும் இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram. மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk மலர் : 04 03.03.2023 வெள்ளிக்கிழமை இதழ் : 84 பக்கங்கள் : 16

# அணு மின் நிலைய கட்டமைப்பை இலங்கையில் ரஷ்யா நிறுவுகிறது!

## உடன்படிக்கை பரிசீலனையில்



கொழும்பு, மார்ச் 03

அணுமின் நிலைய கட்டமைப்பு ஒன்றை இலங்கையில் நிறுவ ரஷ்யா முன்வைத்துள்ளது. இந்த அணு மின் நிலைய கட்டமைப்பு தரையில் அல்லது கடல்பரப்பில் நிறுவப்படும். எனினும், இது தொடர்பில் உறுதியான முடிவு எடுக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது. இது இரு நாடுகளுக்கும் இடையில் முன்னெடுக்கப்படவுள்ள செயல்திட்டம் என்று இலங்கை அணுசக்தி சபையின் தலைவர் பேராசிரியர் எஸ். ஆர். டி. ரோஸா கூறியுள்ளார். 15

## கட்சித் தலைவரை திட்டுகிறேனா? அடியோடு மறுக்கின்றார் சீ. வீ. கே.

யாழ்ப்பாணம், மார்ச் 03

தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசாவை தாம் திட்டித் திரிவதாக தமிழ் இணையக் குழுமம் ஒன்றில் வெளியான தகவல்களை வடக்கு மாகாண அவைத் தலைவரும் தமிழரசு கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் மறுத்துள்ளார்.

மாவை சேனாதிராசா தம்மை கட்சியிலிருந்து ஓரம் கட்டுகிறார் என்று கூறி அவரை சீ. வீ. கே. சிவஞானம் தரக்குறைவாக திட்டி வருகிறார் என்று அந்த இணையத்தில் தகவல் வெளியானது. இது தொடர்பாக 15

குருந்தூர்மலை விகாரை விவகாரம்:

## நீதிமன்ற கட்டளை மீறப்பட்டமை தொடர்பில் அறிக்கையிட உத்தரவு

முல்லைத்தீவு, மார்ச் 03

நீதிமன்ற உத்தரவுக்கு - அவதானிப்புகளுக்கு மாறாக குருந்தூர்மலையில் விகாரை கட்டுமானம் மேற்கொள்ளப்பட்டமை தொடர்பாக முல்லைத்தீவு பொலிஸ் பொறுப்பதிகாரி, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் ஆகியோரை அறிக்கையிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நேற்றைய தினம் குருந்தூர்மலை விகாரை கட்டுமானம் தொடர்பான வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

இதேவேளை, குருந்தூர் மலையில் பௌத்த 15

## கஞ்சா நுகர்ந்த மூவர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 03

உரும்பிராய் சந்தி பகுதியில் பகிரங்கமாகக் கஞ்சா நுகர்ந்த மூன்று பேரை கோப்பாய் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்கள் திருநெல்வேலி மற்றும் யோகபுரம் பகுதியை சேர்ந்த 30 வயதுக்கு 15

## நெருக்கடியில் தவிக்கும் நாடுகளுக்கு சீனா உதவும்!

பிரதமர் லீ கெகியாங் உறுதி

பீஜிங், மார்ச் 03

அதிக கடன் சுமையை சந்தித்துள்ள நாடுகளுக்கு ஆக்கபூர்வமான முறையில் உதவுவதற்காக பல தரப்பு முயற்சிகளில் பங்கேற்க சீனா தயாராக உள்ளது என்று சீன பிரதமர் லீ கெகியாங் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவ பணிப்பாளர் கிறிஸ்லினா ஜோர்ஜீவாவுடன் தொலைபேசியில் உரையாடியபோதே அவர் இந்த உறுதியை அளித்தார். 15

## கடலட்டை அபிவிருத்தி சபை வடக்கில் அமைக்கப்படும்!

அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, மன்னார் மாவட்டங்களில் அமைக்கப்பட்டுள்ள கடலட்டை பண்ணைகள் மூலம் 7,700 மில்லியன் டொலர் வருமானம் கிடைத்துள்ளது. விவைவில், பனை, தென்னை அபிவிருத்தி சபை போன்று கடலட்டை அபிவிருத்தி சபையை உருவாக்கவுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் கே. என். டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று அவர் தனது கட்சி தலைமையகத்தில் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே 15

## வியட்நாமில் தங்கியுள்ள 20பேர் நாடு திரும்ப முடிவு

கொழும்பு, மார்ச் 03

சட்டவிரோதமாக கடல் வழியாக பயணித்த போது, படகு பழுதடைந்ததில் நிர்க்கதியாகி வியட்நாமில் தங்கவைக்கப்பட்டுள்ள இலங்கை அகதிகளில் 20 பேர் தாயகம் திரும்ப விருப்பம் தெரிவித்துள்ளனர்.

இவர்களை நாட்டுக்கு அனுப்புவதற்கு தேவையான நிதி வசதிகளை அகதிகளுக்கான 15

## இலங்கை - இந்திய மீனவர் நல்லெண்ண சந்திப்பு இன்று

வடக்கு மீனவர்கள் எதிர்ப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 03

இலங்கை - இந்திய மீனவர்களுக்கு இடையிலான நல்லெண்ண சந்திப்பு ஒன்றுக்கு இன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கடற்றொழில் அமைச்சின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மாவட்ட 15

## குழந்தைகளுக்கு அளிக்கும் உணவை குறைக்கும் கட்டாயத்தில் பெற்றோர்!

சேவ் த சில்ரன் அமைப்பு

கொழும்பு, மார்ச் 03

நாட்டில் அரைவாசிக்கும் மேற்பட்ட குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு அளிக்கும் உணவின் அளவை குறைக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளன என்று "சேவ் தி சில்ரன்" அமைப்பு நடத்திய ஆய்வில் தெரிய வந்துள்ளது.

நாட்டின் பொருளாதார மந்தநிலையால் ஏற்பட்ட பட்டினி நெருக்கடியாலேயே இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக அந்த ஆய்வு கூறுகின்றது. இதனைத் தடுப்பதற்கும் குழந்தைகளின் எதிர்காலத்தை காப்பாற்றுவதற்கும் அரசாங்கமும் சர்வதேச சமூகமும் தற்போதிருந்தே செயல்பட வேண்டும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

பணவீக்கத்தால் 2022 ஆம் ஆண்டு ஜூன் மற்றும் டிசெம்பர் 15

## '13' தமிழருக்கு பாதுகாப்பானது; கூட்டு சமஷ்டியே இறுதித் தீர்வு!

விக்னேஸ்வரன் எம். பி. விளக்கம்

யாழ்ப்பாணம், மார்ச் 03

பதின்மூன்றை நான் ஆதரிப்பது வட, கிழக்கு தமிழ் மக்களின் பாதுகாப்புக்காகவே. அவர்களின் தீர்வாக அல்ல. தீர்வு கூட்டு சமஷ்டி முறை ஒன்றே என்பதை மீண்டும் ஆணித்தரமாக வலியுறுத்துகின்றேன் - இப்படி தெரிவித்திருக்கின்றார் தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான க. வி. விக்னேஸ்வரன்.

"மாதம் ஒரு கேள்வி - பதில்" என்று அவர் ஊடகங்களுக்கு அனுப்பி வைத்த கேள்வி - பதிலிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளார். மேலும், மனோ கணேசன், நீங்கள் சமஷ்டி தொடர்பில் கரிசனை கொள்வதற்கு முன்னர் 15

# இப்படியும் நடக்கிறது...!

இப்போதெல்லாம் யாரைப் பார்த்தாலும் தலைவரை சாட்சிக்கு இழுப்பது சர்வசாதாரணமாகி விட்டது.

தமிழகத்தில் நெடுமாறன் அண்மையில் விடுத்த அறிவிப்பு, 'சொல்லச்சொன்னார்கள் சொன்னேன்' என்று அவர் கூறியிருந்தாலும், தலைவர் பற்றி சொல்வதற்கு அவருக்கு அருகதை இருப்பதால் தான் அவரை சொல்லச் சொன்னார்கள் என்பது தெரிந்ததுதான்.

ஆனால், அண்மையில் ஒரு கருத்தை தமிழரசு கட்சியின் முன்னாள் பொதுச்செயலாளரும் முன்னாள் எம். பியுமான துரைராஜசிங்கம் அவர்கள் வெளியிட்டிருந்தமையைக் காணமுடிந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கம் செய்யப்பட்டபோது, அந்த கூட்டமைப்பில் ரெலோவும் சேர்க்கப்பட்டபோதிலும் அதன் உறுப்பினரான தற்போதைய எம். பி. ஜனாவை இணைத்துக் கொள்ள வேண்டாம் என்று தலைவரே நேரடியாக தெரிவித்திருந்தாராம்.

அதுமாத்திரமன்றி, புளொட் இயக்கத்தை கூட்டமைப்பில் சேர்க்கவேண்டாம் என்றும் தலைவர் கூறினார் என்று துரைராஜசிங்கம் அவர்கள் திருவாய் மலர்ந்திருக்கிறார்.

சந்திரிகா ஆட்சிக் காலத்தின் போது அவர் ஏன் கொழும்பில் தங்கியிருந்தார் என்பது அவரைத் தெரிந்தவர்களுக்கு மாத்திரமே தெரிந்த சங்கதி.

அதுவல்ல நாம் இன்று இங்கே சொல்ல வருவது.

ரெலோ இயக்கத்தில் ஜனா ஒரு போராளியாக இருந்தபோது, அவர் எப்படி இருந்தார் என்பதை பேசுவதெனில் ஒவ்வொருவர் பற்றியும் பேசலாம். ஆனால், கூட்டமைப்பை உருவாக்க வேண்டும் என்று அதற்காக உழைத்தவர்கள் யார் என்பதெல்லாம் எல்லோருக்கும் தெரிந்த சங்கதிதான். அந்த முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டவர்களில் ஒருவர் மறைந்த ஊடகவியலாளர் 'தராக்கி' என்ற சிவராம்.

அவரே அதன் பின்னணியில் இருந்தாலும் அது யாருடைய அனுமதியுடன் அல்லது விருப்பத்தின் பேரில் நடந்தது என்பதும் தெரிந்ததுதான்.

தராக்கி ஒரு முன்னாள் புளொட் போராளி. ஆனாலும் அவர் பிற்காலத்தில் ஒரு சிறந்த ஊடகராக அறியப்பட்டவர். அவர் ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதிய பத்தி எழுத்துக்கள் பிரபலமானவை. அவர் இந்த கூட்டமைப்பு உருவாக்கம் குறித்து தான் எழுதிய பத்தி ஒன்றில், புளொட் அமைப்பையும் அதில் சேர்க்க வன்னி விருப்பம் தெரிவித்திருந்தது என்பதையும் பதிவுசெய்து இருக்கிறார்.

அப்படியிருக்கையில், துரைராஜசிங்கம் அவர்கள் தலைவர் சொன்னாரென்று இப்போது சொல்வது தராக்கி இப்போது இல்லை என்ற நம்பிக்கையில் வந்ததாக இருக்கவேண்டும். ஆனாலும் அவரின் பத்தி வெளிவந்த அந்த பத்திரிகை பிரதி பலரிடம் இன்றும் உண்டு.

புலிகளின் புலனாய்வு பொறுப்பாளரை வன்னியில் ஓர் ஊடகர் சந்தித்தபோது, புளொட் தலைவரிடம் சொல்லுமாறு ஒரு செய்தியை அந்த ஊடகரிடம் சொல்லி அனுப்பியதை அந்த ஊடகர் சில நாட்களுக்கு முன்னரும் இந்த ஊர்க்குருவியிடம் பகிர்ந்துகொண்டது ஞாபகம். அதைவிட முக்கியமானது, ஜனா பற்றி துரைராஜசிங்கத்துக்கு தலைவர் சொன்னது.

ரொலோ இயக்கத்தில் ஒரு போராளியாக இருந்த ஜனா, தொண்ணுற்றி ஐந்தாம் ஆண்டு பிரிட்டனுக்கு புலம்பெயர்ந்த அவர், இரண்டாயிரத்து பத்தாம் ஆண்டுவரை அங்கேயே வாழ்ந்தவர். அதாவது கூட்டமைப்பு உருவாக்கப்பட்டபோது ஜனா அரசியலிலேயே இல்லை.

அப்படியிருக்கையில், கூட்டமைப்பில் ரெலோவை சேர்த்தாலும் ஜனாவை சேர்க்கக்கூடாது என்று தலைவர் சொல்லியிருக்கிறார்.

அண்மைக்காலமாக தெற்கில் ஜே. வி. பியின் முன்னைய ஆயுதப் போராட்ட கால செயல்பாடுகள் பற்றி பலரும் பேசத் தொடங்கியிருப்பதைக் காணமுடிகின்றது.

தன்னுடைய கணவரை படுகொலை செய்வதவர்கள் ஜே. வி. பியினர்தான் என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பகிரங்க மேடை ஒன்றில் அண்மையில் தெரிவித்திருந்தார்.

அதைப்போலவே, பலரும் ஜே. வி. பியின் ஆயுதப் போராட்டகால கொடுமைகளை இப்போது கிளறி எடுத்து மக்களுக்கு ஞாபகப்படுத்தத் தொடங்கியிருக்கின்றனர்.

ஜே. வி. பியின் கடந்த காலங்கள் எல்லோருக்கும் தெரிந்த சங்கதி தான். ஆனால், கடந்த மூன்று தசாப்தங்களாக ஜனநாயக நீரோட்டத்தில் ஈடுபட்டுவரும் ஜே. வி. பி., இந்த மூன்று தசாப்த காலத்திலும் அதுபோன்ற எந்தத் தவறுகளையும் செய்யவில்லை.

சிறுபான்மையினர் பிரச்னையில் குறிப்பாக, தமிழர் பிரச்னையில் ஜே. வி. பியின் கொள்கை, இன ரீதியான அதன் செயல்பாடுகள் குறித்து இந்த ஊர்க்குருவிக்கு இப்போதும் பல கேள்விகள் இருந்தாலும், இந்த மூன்று தசாப்தங்களில் பிறந்தவர்கள், அதாவது முப்பது வயதுக்குக் குறைவான வாக்காளர்கள் மத்தியில் ஜே. வி. பிக்கு இருக்கும் செல்வாக்கை குறைத்து மதிப்பிட முடியாது.

அதனால்தான், தெற்கில் ஜே. வி. பியின் கடந்த கால வரலாற்றை மீண்டும் பரிசோதனைக்கு உட்படுத்த பல கட்சிகளும் தீவிரமாக முயன்று கொண்டிருக்கின்றன.

காரணம் ஒன்றும் ஆராய்ச்சிக்கு உரியதல்ல. இன்று உள்ளூராட்சி தேர்தல் நடைபெற்றிருந்தால், ஜே. வி. பியே அதிகூடிய வாக்குகளைப் பெற்றிருக்கும் என்றே கருத்துக் கணிப்புக்கள் தெரிவித்திருந்தன.

தெற்கில் சில சுயாதீனமான அமைப்புகள் நடத்தியுள்ளள கருத்துக்கணிப்புகள் ஜே. வி. பி. அதிக ஆதரவுடன் இருப்பதை வெளிப்படுத்தினாலும், அதுவே ஒரு பாராளுமன்ற தேர்தலாக இருந்தால், எந்தக் கட்சியும் ஐம்பது ஆசனங்களுக்கு மேலே பெற்றுக் கொள்ளாது என்பதையே அவை புலப்படுத்துகின்றன.

ஆனாலும், ஜே. வி. பியின் இந்த வளர்ச்சி தெற்கில் பலரையும் அவர்களின் பழைய சங்கதிகளை பேசவைத்திருப்பது போலவே கிழக்கில் தமிழரசுக்காரர்கள் ஜனா பற்றியும் புளொட் பற்றியும் பேசத்தொடங்கியிருப்பது ஏன் என்பதைப் புரிந்துகொள்ள முடிகின்றது.

**- ஊர்க்குருவி**

# யாழ். மாநகர பிரதி முதல்வருக்கு வடக்கு ஆளுநர் அதிகாரமளிப்பு!

யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ். மாநகர சபையின் 2023 வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படும் வரை உத்தேச செலவின் மதிப்பீட்டின்படி வடக்கு ஆளுநர் சில நிதி அதிகாரங்களை பிரதி முதல்வர் து. ஈசனுக்கு வழங்கியுள்ளார்.

அரசமைப்பு சட்டத்தின் அடிப்படையில் வழங்கப்பட்ட இந்த அதிகாரத்தின் கீழ், சம்பளங்களும் படிகளும், பயணப் படிகள், வழங்கு பொருட்களும் தேவைப் பொருட்களும், ஏற்றி இறக்கல், தொலைத் தொடர்பு மற்றும் பயன்பாட்டு சேவைகள், பழுதுபார்த்தலும் பராமரித்தலும், வட்டி கொடுப்பனவு, சபை ஓய்வூதிய கொடுப்பனவு, இலங்கை வங்கிக்கான குத்தகை போன்றவற்றை எதிர்வரும் 14ஆம் திகதி வரை அல்லது 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படும் வரை அவர் இவற்றை செய்ய முடியும்.

யாழ்ப்பாண மாநகர சபையின் 2023ஆம் ஆண்டுக்கான வரவு - செலவு திட்டம் நிறைவேற்றப்படாமையாலேயே அவருக்கு இந்த அதிகாரங்கள் வழங்கப்பட்டுள்ளன என்பதும் குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் அல்ல!



கொழும்பு, மார்ச் 03

பஸில் ராஜபக்ஷ பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் அல்ல என்று சிறீலங்கா பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

தேசிய அமைப்பாளராக சப்புமல் வலவ்வத்தை என்ற நபர் பெயரிடப்பட்டுள்ளார். தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஆவணங்களில் அந்த நபரின் பெயர் இருக்கிறது என்று சன்ன ஜயசுமண குறிப்பிடுகின்றார்.

செயலாளர் சாகர காரியவசம் நாட்டுக்கு பொய் சொல்கிறார். பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்ட கட்சி யாப்பும் தேர்தல்கள் ஆணைக் குழுவுக்கு வழங்கப்பட்ட கட்சி யாப்பும் வேறு வேறு எனவும் ஜயசுமண தெரிவித்துள்ளார்.

# எடை அதிகரிப்போர் வீதம் உயர்வு தொற்றாநோய் பெருகும் அபாயம்

## சுகாதார அமைச்சு எச்சரிக்கை

கொழும்பு, மார்ச் 03

இலங்கையில் அதிக எடை மற்றும் வயிறு பருமனானவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

எடை அதிகரிப்பால் பிற்காலத்தில் தொற்றா நோய்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாக அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்த்தன கூறுகிறார்.

உலக உடல் பருமன் தடுப்பு தினத்தை முன்னிட்டு சுகாதார மேம்பாட்டுப் பணியகத்தில் "விழிப்புடன் இருப்போம், பருமனில் இருந்து விடுபடுவோம்" என்ற தொனிப் பொருளில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டே அவர் இந்தக் கருத்துகளை தெரிவித்தார். (ஐ)

# அபிவிருத்திக் குழு கூட்டத்தின் முன்னாயத்தக் கூட்டம் நேற்று

யாழ்ப்பாணம்,மார்ச் 03

யாழ். மாவட்ட அபிவிருத்திக' குழுக் கூட்டத்தின் முன்னாயத்தக் கூட்டம் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் மாவட்டச் செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

மாவட்ட அபிவிருத்திக் குழுவின் புதிய தலைவராக ஜனாதிபதியால் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அண்மையில் நியமிக்கப்பட்டார். இந்த நிலையிலேயே அவர் தலைமையில் நேற்று இந்தக் கூட்டம் முதல்தடவையாக நடைபெற்றது.

(ஐ)

# அரசுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் இன்று போராட்டம்

யாழ்ப்பாணம், மார்ச் 03

அதிகரித்த மின்சார கட்டண உயர்வைக் கைவிட வலியுறுத்தியும், உணவு - எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்களின் விலைகளைக் குறைக்க வலியுறுத்தியும் இன்றைய தினம் போராட்டம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளது.

முற்பகல் 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் பேருந்து நிலையம் முன்பாக நடைபெறவுள்ள இந்த மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் அனைவரையும் இணைந்து கொள்ளுமாறு புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது. (ஐ)

# இறந்த நிலையில் யானை மீட்பு



புத்தளம், மார்ச் 03

புத்தளம் கருவலகஸ்வெவை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட எகொடபிட்டி - பெரியவில்லு பகுதியில் காட்டு யானை யொன்று உயிரிழந்த நிலையில் நேற்று சடலமாக மீட்கப்பட்டது.

இந்த காட்டு யானை சேற்றில் அகப்பட்டு உயிரிழந்திருக்கலாம் என்று வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் தெரிவித்தனர்.

உயிரிழந்த காட்டு யானை சுமார் 35 வயது மதிக்கத்தக் கது. இந்த யானைக்கு உடல்கூராய்வு பரிசோதனை செய்யப்படவுள்ளது. (ஐ)

Eelanadu ஈழநாடு
03.03.2023 வெள்ளிக்கிழமை
பிலவ வருடம், மாசி 19

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# நிதி மோசடி - விக்னேஸ்வரனின் குற்றச்சாட்டு?

தமிழ் மக்கள் கூட்டணியின் தலைவர் சி. வி. விக்னேஸ்வரன் புலம்பெயர் சமூகத்திலுள்ளோர் மீது பகிரங்க குற்றச்சாட்டொன்றை முன்வைத்திருக்கின்றார். அதாவது, தமது கட்சியின் பெயரில் சிலர் நிதி நேகரிப்பில் ஈடுபடுகின்றனர். ஆனால், அவர்களை நிதிசேகரிப்பில் ஈடுபடுமாறு தாம் கோரவில்லை - எனவே, தமது கட்சியின் பெயரை பயன்படுத்தி நிதிசேகரிப்பில் ஈடுபடுவோரை ஆதரிக்க வேண்டாமென்று அவர் அறிக்கை ஒன்றின் மூலம் கோரியிருக்கின்றார். தமிழ்த் தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் கட்சிகளில் விக்னேஸ்வரன் ஒருவரே இவ்வாறானதோர் அறிக்கையை வெளியிட்டிருக்கின்றார். பிரதான அரசியல் கூட்டான தமிழ்த் தேசியக் கூட்டமைப்போ அல்லது கூட்டமைப்பிலிருந்து வெளியேறிச் செயல்பட்டுவரும் இலங்கை தமிழரசு கட்சியோ - அல்லது தமிழ் தேசிய மக்கள் முன்னணியோ இவ்வாறானதொரு குற்றச்சாட்டை இதுவரையில் முன்வைத்ததில்லை.

விக்னேஸ்வரன் அண்மையில், உள்ளூராட்சி தேர்தலுக்கு நிதியுதவி வழங்குமாறு பகிரங்கமாக அறிவித்திருந்தார். இவ்வாறானதொரு பின்னணியிலேயே தற்போது தமது கட்சியின் பெயர் துஷ்பிரயோகம் செய்யப்படுவதாக அறிவித்திருக்கின்றார். விக்னேஸ்வரன், வடக்கு மாகாண முதலமைச்சராக இருந்தபோது, கனடாவிலுள்ள புலம்பெயர் ஆதரவாளர்கள் அவரை அழைத்திருந்தனர். கனடாவில் நிதிசேகரிப்பிலும் ஈடுபட்டிருந்தனர். முதலமைச்சர் நிதியத்திற்காகவே குறித்த நிதி சேகரிக்கப்பட்டதாகக் கூறப்பட்டது. ஆனால், அதன் பின்னர் குறித்த நிதிக்கு என்ன நடந்ததென்பது தெரியவில்லை. இதேபோன்று விக்னேஸ்வரன் இணைத் தலைவராக இருந்த, தமிழ் மக்கள் பேரவையின் செயல்பாடுகளுக்காகவும் புலம்பெயர் சூழலில் நிதி சேகரிப்புகள் இடம்பெற்றன. தமிழ் மக்கள் பேரவையின் தலைமையின் கீழ் இடம்பெற்ற இரண்டு ‘எழுக தமிழ்’ நிகழ்வுகளின்போதும், புலம்பெயர் சமூகத்திலிருந்து நிதி ஆதரவு வழங்கப்பட்டது. ஆனாலும் அந்த சந்தர்ப்பத்தில்கூட இவ்வாறானதொரு குற்றச்சாட்டு முன்வைக்கப்படவில்லை.

ஒப்பீட்டடிப்படையில் விக்னேஸ்வரனின் தமிழ் மக்கள் கூட்டணி பிரதான கட்சியல்ல. அவ்வாறிருக்கின்றபோது, விக்னேஸ்வரனின் கட்சியின் பெயரால், புலம்பெயர் சமூகத்திலுள்ளோர் மோசடியாக நிதி சேகரிக்கின்றனர் என்றால், அது பாரதூரமானது. நிச்சயமாக இந்த ஏற்பாடுகள் உள்ளூர் முகவர்களிலிருந்தே மேற்கொள்ளப்பட்டிருக்க வேண்டும். விக்னேஸ்வரன் அவரின் அறிக்கையில் விபரங்களை வெளிப்படுத்தவில்லை. உண்மையில், விக்னேஸ்வரன் குறித்த நிதிசேகரிப்பில் ஈடுபடும் புலம்பெயர் தரப்பினரையும், அவர்களுடன் இணைந்து செயல்படும் உள்ளூர் முகவர்களையும் மக்களுக்கு வெளிப்படுத்த வேண்டும். ஏனெனில் இவ்வாறு பொதுவாக குற்றச்சாட்டுக்களை முன்வைப்பது, தமிழர் தாயகத்தின் மீட்சிக்காக பல்வேறு விடயங்களை மேற்கொண்டுவரும் அனைத்து புலம்பெயர் அமைப்புகளையும் தனிநபர்களையும் இழிவுபடுத்துவதாக அமைந்துவிடலாம்.

தமிழ்த் தேசியத்தை பெயரில் வைத்திருக்கும் அனைத்து கட்சிகளும் புலம்பெயர் அமைப்புகளோடு பல்வேறு வழிகளில் தொடர்புகளை பேணிவருகின்றன. சில அமைப்புகள் சில கட்சிகளையும் ஆதரிக்கின்றன. நிதி உதவிகளையும் வழங்கிவருகின்றன. எனினும், ஆரம்பத்தில் இருந்தது போன்ற நிலைமை இப்போதில்லை. யுத்தத்துக்குப் பின்னரான கடந்த பதின்மூன்று வருடங்களில், அரசியல் கட்சிகள் மீதான நம்பிக்கைகள் பெருமளவு வீழ்ச்சியடைந்துவிட்டன.

இவ்வாறானதொரு சூழலில், விக்னேஸ்வரன் ஒருவரே, அண்மையில் தமது கட்சிக்கு நிதியுதவி வழங்குமாறு பகிரங்கமாக அறிவித்திருந்தார். தற்போது பகிரங்கமாக குற்றசாட்டையும் முன்வைத்திருக்கின்றார். இந்த விடயம் தொடர்பில் புலம்பெயர் அமைப்புகள் கவனம் செலுத்த வேண்டும். ஏனெனில், இது தாயகத்துக்கும் புலம்பெயர் சூழலுக்கும் இடையில் இடைவெளிகளை ஏற்படுத்திவிடலாம். எனவே, விக்னேஸ்வரன் தனக்கு தெரிந்த விடயங்களை வெளிப்படுத்த வேண்டும்.

# தேர்தலுக்கான நிதியை விடுவிப்பது குறித்து பாராளுமன்றில் பிரேரணை

*கொழும்பு, மார்ச் 03*



உள்ளூராட்சி மன்றத் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை விடுவிப்பது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்தில் முன்வைக்க எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைக்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்தார். ஆளும் தரப்பின் எதிர்ப்பால் திறைசேரியின் செயலாளர் பாராளுமன்றத்திற்கு அழைக்கும் யோசனை இரத்து செய்யப்பட்டது என்றும் பாராளுமன்ற உறுப்பினர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கட்சிகளின் தலைவர்கள் கூட்டம் தொடர்பில் வினவிய போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

நாட்டின் நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கு உண்டு. ஆகவே, பாராளுமன்றம் தலையிட வேண்டும் என தேசிய தேர்தல் ஆணைக்குழு சபாநாயகருக்கு முன்வைத்த கோரிக்கை தொடர்பில் கட்சி தலைவர் கூட்டத்தில் விரிவாக பேசப்பட்டது. நாட்டு மக்களின் ஜனநாயக உரிமையை பாதுகாக்க பாராளுமன்றத்துக்கு பொறுப்பு உள்ள நிலையில், அந்தப் பொறுப்பை தேர்தல்கள் ஆணைக்குழு சுட்டிக்காட்டும் நிலைக்கு பாராளுமன்றம் தள்ளப்பட்டுள்ளமை கவலைக்குரியது.

அரசமைப்பின் பிரகாரம் தேர்தல் நடவடிக்கைகளை ஆணைக்குழு முன்னெடுத்துள்ள நிலையில் நிறைவேற்றுத்துறை அதிகாரம் தேர்தல் செயற்பாடுகளுக்கு தடையாக செயற்படுகிறது. தேர்தலுக்கு உத்தியோகபூர்வ அறிவிப்பு விடுக்கப்பட்டுள்ள நிலையில் நாட்டில் தேர்தல் என்பதொன்று கிடையாது என ஜனாதிபதி குறிப்பிட்ட கருத்து முற்றிலும் தவறானது. 2023 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் தேர்தல் செலவுகளுக்காக நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் தேர்தல் செலவுகளுக்கு தேவையான நிதியை விடுவிக்க திறைசேரி மறுப்பு தெரிவித்துள்ளதால் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பணிகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்துள்ளன.

நிதி விடுவிப்பு தொடர்பில் திறைசேரியின் செயலாளரை பாராளுமன்றத்துக்கு அழைக்கும் அதிகாரம் சபாநாயகருக்கு உண்டு. ஆனால், அதற்கு ஆளும் தரப்பின் உறுப்பினர்கள் இடமளிக்கவில்லை. தேர்தலுக்கு தயார் என பொது மக்கள் மத்தியில் குறிப்பிடும் சிறீ லங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள்தான் மறைமுகமாக தேர்தலுக்கு பெரும் தடைகளை ஏற்படுத்தி வருகிறார்கள்.

உள்ளூராட்சிமன்றத் தேர்தல் நடவடிக்கைக்கு தேவையான நிதியை விடுவிப்பது தொடர்பான பிரேரணையை பாராளுமன்றத்துக்கு கொண்டு வர எதிர்க்கட்சிகள் முன்வைத்த யோசனைக்கு சபாநாயகர் இணக்கம் தெரிவித்துள்ளார்.இந்த பிரேரணை அடுத்த மாதம் முதல் வாரத்தில் இடம்பெறும் பாராளுமன்ற அமர்வில் முன்வைக்கப்படும்.

நிதி விடுவிப்பு தொடர்பான பிரேரணை நிறைவேற்றப்பட்டால் நிதியமைச்சு நிச்சயம் நிதி விடுவிக்க வேண்டும். எத்தனை பேர் நாட்டு மக்களின் வாக்குரிமைக்கு ஆதரவாக உள்ளார்கள். எத்தனை பேர் எதிராக உள்ளார்கள் என்பதை இந்த பிரேரணை ஊடாக மக்கள் அறிந்துக் கொள்ளலாம் - என்றார். (ஐ)

# சங்கிலியன் மன்றத்தின் விளையாட்டு விழா

*யாழ்ப்பாணம், மார்ச் 03*

நல்லூர் சங்கிலியன் மன்றத்தின் 78ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நடத்தப்படும் விளையாட்டு விழா நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சங்கிலியன் மன்ற முற்றத்தில் நடைபெறவுள்ளது.

மருத்துவர் வி. ஜனகன் தலைமையில் நடைபெறும் இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக சி. டி. பி. வங்கியின் யாழ். கிளை முகாமையாளர் திருமதி சுரமியா சுதர்சன் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக, நல்லூர் மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் திருமதி பிரியதர்ஷினி கமல்ராஜ், ஊர்காவற்றுறை மகளிர் அபிவிருத்தி நிலைய போதனாசிரியர் திருமதி தமிழரசி அறிவரசன், நல்லூர் பிரதேச செயலக முகாமைத்துவ உதவியாளர் திருமதி தயாரூபி கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் பங்கேற்கவுள்ளனர். (ஐ)

# ஐ. நா. படையில் இணைவதற்கு 125 இலங்கை படையினர் பயணம்!


*கொழும்பு, மார்ச் 03*

லெபனானில் உள்ள ஐக்கிய நாடுகளின் படையில் இணைவதற்காக இலங்கை இராணுவத்தின் 14 ஆவது தலைமையக பாதுகாப்புக் குழுவைச் சேர்ந்த 125 சிப்பாய்கள் நேற்று காலை கட்டுநாயக்க விமான நிலையத்திலிருந்து லெபனான் புறப்பட்டனர். இந்தப் படையில் 10 அதிகாரிகள் மற்றும் 115 சிப்பாய்கள் அடங்குவர். அவர்களில் 2 பெண் அதிகாரிகளும் 8 பெண் சிப்பாய்களும் உள்ளடங்குவர்.

லெபனான் இடைக்காலப் படைகளின் கடமைகளுக்காக வெடிபொருட்கள் மற்றும் போதைப்பொருட்களைக் கண்டறிய பிரத்தியேக பயிற்சி பெற்ற நான்கு நாய்களும் சென்றன.

இந்தக் குழு நேற்று வியாழக்கிழமை அதிகாலை 2.00 மணிக்கு கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து எத்தியோப்பியன் எயார் லைன்ஸ் விமானத்தில் லெபனானுக்குப் புறப்பட்டது.

# அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



ஈழநாடு



மார்ச் - 03 வெள்ளிக்கிழமை
சுபகிருது வருடம் - மாசி 19
நல்ல நேரம் : 09.00 - 10.30
ராகு காலம் : 10.30 - 12.00
திதி : துவாதசி




**மேடம்**
வியாபாரத்தை விரிவு செய்யும் முயற்சி நிறைவேறும். நண்பர் உதவியால் நன்மை அடைவீர்கள். பண வருவாயில் உண்டான தடைகள் விலகும். நிதிநிலை உயரும்.

**இடபம்**
கொடுக்கல் வாங்கல் விவகாரத்தில் கவனமுடன் செயல்படுவது நன்மையாகும். குடும்பத்தில் ஒற்றுமை அதிகரிக்கும். பொன் பொருள் சேர்க்கை உண்டாகும்.

**மிதுனம்**
மனதில் குழப்பமும் செயலில் தடுமாற்றமும் ஏற்படும். நிதானித்து செயல்படவும். நீங்கள் மேற்கொள்ளும் முயற்சியை நிறைவேற்ற முடியாமல் இன்று சங்கடப்படுவீர்கள்.

**கடகம்**
குடும்பத்தின் தேவைக்காக வீட்டில் உள்ள பொருட்களை விற்பனை செய்து சமாளிப்பீர்கள்.புதிய முயற்சிகள் இன்று பலன் தராமல் போகும். வழக்கமான செயல்களிலும் நிதானம் தேவை.

**சிம்மம்**
புதிய முயற்சி பலன் அளிக்கும். தொழிலில் எதிர்பார்த்த லாபம் உண்டாகும். சிலருக்கு புதிய வேலை அமையும். குடும்பத்தில் இருந்த சங்கடங்கள் விலகும். உங்களது முயற்சிகள் வெற்றியாகும்.

**கன்னி**
எதிர்பார்த்த ஆதாயம் ஏற்படும். புதிய தொழில் தொடங்கும் முயற்சி நிறைவேறும். உத்தியோகத்தில் இருந்த பிரச்னைகளை சரி செய்வீர்கள். ஆதரவு உண்டாகும். லாபம் அதிகரிக்கும்.

**துலாம்**
பணியிடத்தில் உண்டான பிரச்னைகளை சரி செய்து நீங்கள் நினைத்ததை சாதிப்பீர்கள். மனக் குழப்பம் அதிகரிக்கும். முயற்சிகளில் இழுபறியும் தாமதமும் ஏற்படும். உதவி நன்மை தரும்.

**விருட்சிகம்**
செயல்களில் உண்டான தடைகள் விலகும். உங்கள் எதிர்பார்ப்புகள் இன்று நிறைவேறும். பிரச்னைகள் இன்று உங்களைத்தேடி வரும். யாரிடமும் வாக்கு வாதங்களில் ஈடுபட வேண்டாம்.

**தனுசு**
உங்கள் கனவு நிறைவேறும். புதிய வாகனம் வாங்கும் எண்ணம் வெற்றியாகும். வாழ்க்கைத் துணையுடன் ஏற்பட்ட பிரச்னை விலகும். ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுத்து செல்வீர்கள்.

**மகரம்**
கடவுளின் அருளால் எதிர்ப்புகள் விலகும். செயலில் சாதகமான நிலையைக் காண்பீர்கள். கேள்விக் குறியாகவே இருந்த ஒரு முயற்சி உங்களுக்கு சாதகமாகும். வருமானம் அதிகரிக்கும்.

**கும்பம்**
குடும்ப உறவுகளிடம் மனக்கசப்பு ஏற்படும். அனுசரித்துச் செல்வது நன்மையாகும். பிள்ளைகளால் சங்கடங்களுக்கு ஆளாவீர்கள். குடும்பத்தில் நெருக்கடிகளை சந்திப்பீர்கள்.

**மீனம்**
திட்டமிட்ட காரியங்களை சிறப்பாக முடிப்பீர்கள். உடல் நலத்தில் மிகவும் கவனம் தேவை. தாய் வழி உறவினர்களால் அலைச்சல் ஏற்படும். வெளி வட்டார தொடர்புகள் அதிகரிக்கும்.

# ஈரோடு இடைத்தேர்தலில் தி. மு. க. கூட்டணி முன்னிலை!

ஈரோடு, மார்ச் 03

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் 33 ஆயிரம் வாக்குகள் வித்தியாசத்தில் முன்னிலை வகிக்கிறார்.

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தலில் பதிவான வாக்குகளை எண்ணும் பணி நேற்று காலை 8 மணிக்கு தொடங்கியது. 15 சுற்றுகளாக நடக்கும் வாக்கு எண்ணிக்கையில், நேற்று மாலை 4 மணிவரையான நிலவரத்தின்படி, காங்கிரஸ் வேட்பாளர் ஈ. வி. கே. எஸ். இளங்கோவன் 76 ஆயிரத்து 834 வாக்குகள் பெற்றிருந்தார். அ. தி. மு. க. வேட்பாளர் தென்னரசு 28 ஆயிரத்து 637 வாக்குகள் பெற்றிருந்தார்.

நாம் தமிழர் வேட்பாளர் 4ஆயிரத்து 610 வாக்குகளும், தே. மு. தி. க. வேட்பாளர் 705 வாக்குகளும் பெற்றிருந்தனர்.

# சிறையிலுள்ள இலங்கையரை விடுவிக்க தமிழக அரசாங்கத்தை பரிசீலிக்க உத்தரவு

புதுடில்லி, மார்ச் 03

சிறையிலிருந்து முன்கூட்டியே விடுவிக்க கோரிய இலங்கை தமிழரின் மனுவை தமிழக அரசைப் பரிசீலிக்குமாறு உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இலங்கை தமிழரான ராஜன் குற்ற வழக்கு ஒன்றில் தண்டனை பெற்று சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். சுமார் 35 ஆண்டுகளாக சிறையில் இருக்கும் தன்னை நன்னடத்தை அடிப்படையில் முன்கூட்டியே விடுவிக்கக்கோரி கடந்த 2018ஆம் ஆண்டு தமிழக அரசுக்கு கோரிக்கை மனு அளித்தார். ஆனால், அந்த மனுவை கடந்த 2021ல் தமிழக அரசு நிராகரித்தது.

இதனைத் தொடர்ந்து, தன்னை சிறையிலிருந்து முன்கூட்டியே விடுவிக்கக்கோரி ராஜன் உச்சநீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார். அந்த மனு உச்சநீதிமன்றத்தில் நீதிபதி அபய் ஒஹா தலைமையிலான அமர்வில் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் வேறு எந்த குற்றமும் செய்யவில்லை என்பதாலும், அவரின் சிறை நன்னடத்தையை கருத்தில் கொண்டும் மனுதாரர் தன்னை முன்கூட்டியே விடுதலை செய்ய தமிழக அரசிடம் வைத்த கோரிக்கையை 3 வாரத்துக்குள் மீண்டும் மறுபடியும் பரிசீலிக்குமாறு தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

இதேவேளையில் அந்த இடைப்பட்ட காலத்தில் மனுதாரரை உரிய முகாமுக்கு மாற்றவும் தமிழக அரசுக்கு உத்தரவிட்டு, வழக்கு மீதான விசாரணையை மார்ச் 27ஆம் திகதிக்கு ஒத்திவைத்தனர்.

# கச்சதீவு திருவிழா இன்று; 2,408 இந்தியர்கள் பங்கேற்பர்!

இராமேஸ்வரம், மார்ச் 03

கச்சத்தீவு புனித அந்தோணியார் ஆலய திருவிழா இன்று வெள்ளிக்கிழமை தொடங்குகிறது. இதில் இந்தியாவிலிருந்து 2 ஆயிரத்து 408 பேர் பங்கேற்கவுள்ளனர்.

இதற்காக இராமேஸ்வரத்தில் இருந்து 60 விசைப்படகுகள், 12 நாட்டுப் படகுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. பயணம் மேற்கொள்ள உள்ளவர்களுக்கான அடையாள அட்டை நேற்று வழங்கப்பட்டது.

இன்று காலை 6 மணியிலிருந்து இராமேஸ்வரம் மீன்பிடி இறங்குதளத்தில் சுங்கத் துறையின் சோதனைக்குப் பின்பு படகுகள் கச்சதீவுக்கு புறப்படும். இன்றும் நாளையும் பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெறும். இதில், பங்கேற்கும் கிறிஸ்தவர்கள் நாளை மாலை 5 மணிக்குள் மீண்டும் இராமேஸ்வரம் வந்து சேரும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளது.

இரு நாடுகளின் பக்தர்களுக்கும் தேவையான உணவு, குடிநீர், மருத்துவம் மற்றும் அடிப்படை வசதிகளை யாழ்ப்பாணம் மாவட்ட அரச அதிபர் பணிமனை செய்துள்ளது.

(ஐ)

# தமிழக மீனவர்களை பாதுகாப்பதற்கு சகல நடவடிக்கைகளும் எடுத்துள்ளோம்!

## வெளியுறவு அமைச்சர் அண்ணாமலைக்கு பதில்

சென்னை, மார்ச் 03

தமிழக மீனவர்களை தாக்கியவர்கள்மீது நடவடிக்கை கோரியும், மீனவர்களை பாதுகாக்க வலியுறுத்தியும் மத்திய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெய்சங்கருக்கு, பா. ஜ. க. தமிழக தலைவர் அண்ணாமலை அண்மையில் கடிதம் எழுதியிருந்தார். இதற்கு அமைச்சர் ஜெய்சங்கர் பதில் அனுப்பியுள்ளார்.

அதில் கூறியுள்ளதாவது, நாகை மாவட்டம் கோடியக்கரை அருகே மீன் பிடித்துக் கொண்டிருந்த மீனவர்கள் மீது இலங்கை கடற்படையினர் நடத்திய தாக்குதலில் 4 பேர் காயமடைந்தமை தொடர்பாக நீங்கள் அனுப்பிய கடிதம் கிடைத்தது. இந்த விவகாரம் உடனடியாக தூதரகம் வாயிலாக, இலங்கை அரசிடம் எடுத்துச் செல்லப்பட்டது.

மேலும், தாக்குதல் தொடர்பான விவரங்களை இலங்கை அரசிடம் இந்திய தூதரகம் கோரியுள்ளது. இந்திய மீனவர்களை பாதுகாப்பதற்கான அனைத்து நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இவ்வாறு கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ)

# ஈரோடு கிழக்கு தேர்தல் வெற்றி திராவிட மொடலுக்கு கிடைத்தது

## முதல்வர் மு. க. ஸ்டாலின்

சென்னை, மார்ச் 03

ஈரோடு கிழக்கு இடைத் தேர்தலில் ஈ. வி. கே. எஸ் இளங்கோவன் பெற்றிருப்பது வரலாற்றில் பதிவாகக்கூடிய வெற்றி என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியிருக்கிறார்.

20 மாதகால திராவிட மொடல் ஆட்சிக்குக் கிடைத்த அங்கீகாரம் இது. தி. மு. க. ஆட்சியை எடைபோடும் தேர்தலாக, இந்த இடைத்தேர்தல் இருக்கும் எனக் கூறி வந்தேன். மக்களும் அதற்கேற்றால் போல எடைபோட்டு மிகப்பெரிய வெற்றியை கொடுத்துள்ளனர்.

விரைவில் நடைபெற உள்ள பாராளுமன்றத் தேர்தலுக்கு அச்சாரமாக இந்த தேர்தல் முடிவு அமைந்துள்ளது. மக்களவை தேர்தலில் இதைவிட மிகப்பெரிய வெற்றியை மக்கள் வழங்குவர். தன்னையே மறந்து நாலாந்தர பேச்சாளர்போல எடப்பாடி பழனிசாமி பேசிவந்தார். அவருக்கு மக்கள் நல்ல பதிலடி கொடுத்துள்ளனர்." என்று கூறினார்.

இதேபோல் தேசிய அரசியலுக்கு ஃபரூக் அப்துல்லா அழைப்பு விடுத்தது குறித்து பேசிய முதல்வர் ஸ்டாலின், "நான் ஏற்கனவே தேசிய அரசியலில்தான் இருக்கிறேன். யார் தேர்தலில் வென்று பிரதமராக வரவேண்டும் என்பதைவிட யார் பிரதமராக வரக்கூடாது என்பதுதான் இப்போதைய கொள்கை." என்றார்.

(ஐ)

# முதலீட்டுத் தகவல்களை டிஜிற்றல் மயமாக்க ஜனாதிபதி அறிவுறுத்தல்



கொழும்பு, மார்ச் 03

அவசியமான எந்தவொரு தரப்பினரும் இலகுவாகவும் விரைவாகவும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் முதலீட்டுத் தகவல்களை, டிஜிற்றல் மயமாக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்துள்ளார்.

இலங்கையில் முதலீட்டு வாய்ப்புகளை ஊக்குவித்தல் மற்றும் மேம்படுத்தலே இதன் நோக்கங்களாகும் என்றும், இதன் மூலம் முதலீட்டாளர்கள் புதிய முதலீட்டு வாய்ப்புகளை இலகுவாக இனங்கண்டு கொள்வதற்கான வாய்ப்பைப் பெறுவதாகவும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தப் பணிப்புரைகளை வழங்கினார்.

முதலீட்டு ஊக்குவிப்புக்காக முன்வைக்கப்பட்டுள்ள 2023 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்தல் மற்றும் நிலத்தை செயற்திறனுடன் பயன்படுத்துவது தொடர்பான 2023 வரவு - செலவுத் திட்ட முன்மொழிவுகளை அமுல்படுத்துவதன் முன்னேற்றம் குறித்து மீளாய்வு செய்வதற்காக இந்தக் கலந்துரையாடல் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

ஒவ்வொரு அரச நிறுவனங்களாலும் திணைக்களங்களாலும் பயன்படுத்தப்படாமல் உள்ள அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளின் அளவை விரைவாகக் கண்டறிந்து அடையாளம் காணப்பட்ட காணிகள் தொடர்பான தகவல்களை உள்ளடக்கிய தரவு வங்கியொன்றை நிறுவவேண்டியதன் அவசியத்தையும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அடையாளம் காணப்பட்ட காணிகளை வினைத்திறனாகப் பயன்படுத்துவதற்கு பொருளாதார ரீதியாக பயனுள்ள முறையான வேலைத்திட்டமொன்றை தயாரிக்குமாறும் இது தொடர்பில் தேவையான தீர்மானங்களை எடுப்பதற்கு குழுவொன்றை நியமிக்குமாறும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பணிப்புரை விடுத்தார்.

கமத்தொழில் மேம்பாட்டுச் சட்டம் மற்றும் வயல் நிலச் சட்டத்தை காலத்திற்கேற்ப மீள் திருத்தவேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அதன்படி பயிரிடக்கூடிய வயல்நிலங்களில் மீண்டும் பயிரிடவும் ஏனைய வயல் நிலங்களில் ஏனைய பயிர்களை விளைவிக்கக்கூடிய வகையில் அது தொடர்பான சட்டங்களை திருத்தியமைக்கவேண்டியதன் அவசியத்தையும் சுட்டிக்காட்டினார். (அ)

# வரி ஏய்ப்பு செய்பவர்களை அடையாளம் காண உத்தரவு



கொழும்பு, மார்ச் 03

வருமானத்தை மறைத்து வரி ஏய்ப்பு செய்பவர்களை உடனடியாக அடையாளம் காணுமாறு உள்நாட்டு இறைவரி திணைக்களத்தின் ஆணையாளர் நாயகத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

வருமானத்தை வெளியிடாமல் தொடர்ச்சியாக வரி ஏய்ப்பு செய்யும் சில தொழில்களில் ஈடுபடும் நபர்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அடையாளம் காணவேண்டும் என நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய தெரிவித்தார்.

உள்நாட்டு இறைவரி திணைக்கள அதிகாரிகளுடனான சந்திப்பின்போது, நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய, வரி விதிப்பு மற்றும் வரி அறவீடுகள் தொடர்பில் விரிவாக கலந்துரையாடினார்.

அரசாங்கத்தின் வருமானத்தில் கவனம் செலுத்தப்பட்ட நேரத்தில் வரி ஏய்ப்பாளர்களை அடையாளம் காண்பதும் மிகவும் முக்கியமானது என அவர் குறிப்பிட்டார். இதற்கமைய இந்த பிரச் னைக்கு விரைந்து தீர்வு காணு மாறு அவர் அறிவுறுத்தல் வழங்கியுள்ளார். (அ)

# தமது இருப்பைத் தக்கவைக்கவே தேர்தலை பிற்போட அரசு முயற்சி

## அநுரகுமார திஸாநாயக்க சுட்டிக்காட்டு

கொழும்பு, மார்ச் 03

**தமது அரசியல் இருப்பை தக்கவைக்கவே ராஜபக்ஷ, ரணில் தரப்பு தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**



பொலனறுவையில் நேற்று முன்தினம் புதன்கிழமை இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் பங்கேற்று கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்தக்கோரி முன்னெடுக்கப்பட்டுவரும் போராட்டங்கள் தொடரும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தேர்தலை ஒத்திவைத்தால், நாம் வீட்டுக்குள் முடங்கிவிடுவோம் என ரணில் நினைக்கிறார் போலும்.

அதற்கு இடமில்லை. தேர்தல் நிச்சயம் நடத்தப்படவேண்டும். அதனை நிச்சயம் நாம் பெறுவோம்.

தமது அரசியல் இருப்பை தக்கவைக்கவே ராஜபக்ஷ, ரணில் தரப்பு தேர்தலை பிற்போட முயற்சிக்கின்றது.

சஜித் தரப்பும் அந்த அணியில்தான் உள்ளது. அதனால்தான் மக்கள் தேசிய மக்கள் சக்தியை ஆதரிக்கும் முடிவை எடுத்துள்ளனர் - என்றார். (அ)

# கிளாலி குளத்தில் மூழ்கி குடும்பஸ்தர் உயிரிழப்பு!

கிளிநொச்சி, மார்ச் 03

கிளிநொச்சி, பளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிளாலி பகுதியில் உள்ள தாமரைக் குளத்தில் மூழ்கிக் குடும்பஸ்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

அந்த குளத்தில் நீராடச் சென்றவரே இவ்வாறு சடலமாக கண்டெடுக்கப்பட்டார் என பொலிஸாரின் ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

கிளாலி பகுதியைச் சேர்ந்த 52 வயதுடைய மரியான் பீரிஸ் என்ற 2 பிள்ளைகளின் தந்தையே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டார்.

குறித்த சம்பவம் தொடர்பில் பளை பொலிஸார் பூர்வாங்க விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (அ)

# 330 புதுப்பிக்கத்தக்க எரிசக்தித் திட்டங்கள் எதிர்வரும் நான்கு வருடங்களில் நடைமுறை

கொழும்பு, மார்ச் 03

எதிர்வரும் நான்கு வருடங்களில் 330 புதுப்பிக்கத்தக்க எரிசக்தி திட்டங்களை நடைமுறைப்படுத்தவுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

இதன் மூலம் தேசிய மின் உற்பத்திக்கு 2300 மெகாவோட் மின்சாரத்தை சேர்க்கும் சாத்தியக்கூறுகள் காணப்படுவதாக



அவர் குறிப்பிட்டார்.

மிசக்தி எரிசக்தி அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அரச நிறுவனங்களால் அனுமதிக்கப்படும் திட்டங்களை விரைவுபடுத்தவும், அங்கீகாரம் பெற முடியாத திட்டங்களுக்கு வழங்கப்பட்ட தற்காலிக உரிமங்களை இரத்து செய்யவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (அ)

# தனியார் வங்கிகளில் கணக்குகளை திறப்பதற்கு அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவை அனுமதி

கொழும்பு, மார்ச் 03

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை இறக்குமதி செய்வதற்கான கடன் பத்திரங்களை வழங்குவதில் தடை ஏற்பட்டால், அரச நிறுவனங்களுக்கு தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் நடைபெற்ற விசேட அமைச்சரவைக் கூட்டத்தில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது.

தேவை ஏற்பட்டால் நிதி அமைச்சின் அனுமதியைப் பெற்று தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கு அமைச்சுகள், திணைக்களங்கள் மற்றும் சட்டச் சபைகளுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

மருந்து, எரிபொருள் மற்றும் எரிவாயு போன்ற அத்தியாவசியப் பொருட்களை கடன் கடிதங்கள் இன்றி கொள்வனவு செய்ய முடியாது என்பதால், நிதி நடவடிக்கைகளில் இடையூறு ஏற்படும் அபாயம் பொதுமக்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் என அமைச்சரவைக் கூட்டத்தின்போது அமைச்சர்கள் எடுத்துரைத்தனர்.

இதன்படி, முன்னிலைப்படுத்தப்பட்ட விடயங்களை கருத்திற்கொண்டு, அவசரநிலை ஏற்பட்டால் தனியார் வங்கிகளில் கணக்குகளை ஆரம்பிப்பதற்கும் பராமரிப்பதற்கும் அரச நிறுவனங்களுக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. (அ)

# விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் ரோக்கன் வழங்கும் பணி ஆரம்பம்!

கொழும்பு, மார்ச் 03

விவசாயிகள் எரிபொருளை பெற்றுக்கொள்ளும் வகையில் ரோக்கன்களை வழங்குவதற்கு விவசாய அபிவிருத்தி திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது.

விவசாய அபிவிருத்தி திணைக்களத்தினால் பல மாவட்டங்களுக்கு உரிய டோக்கன்கள் ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளதுடன், நேற்று வியாழக்கிழமை கொழும்பு உள்ளிட்ட ஐந்து மாவட்டங்களுக்கு எரிபொருள் ரோக்கன்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இதன்படி, நேற்று முதல் அனைத்து விவசாயிகளும் குறித்த எரிபொருள் நிரப்பு நிலையங்களில் இவற்றை பெற்றுக்கொள்ள முடியும் எனத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நாட்டில் நெல் பயிரிடும் விவசாயிகளுக்கு பயிர்ச் செய்கைக்காக பயன்படுத்துவதற்காக சீன அரசாங்கம் 6.98 மில்லியன் லீற்றர் டீசலை இலவசமாக வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தலை ஒத்திவைக்க ஜே.வி.பியும் இணக்கம்

## ஐக்கிய மக்கள் சக்தி குற்றச்சாட்டு

கொழும்பு, மார்ச் 03

**உள்ளூராட்சி மன்றத் தேர்தலை ஓராண்டுக்கு ஒத்தி வைக்க தேசிய மக்கள் சக்தி, அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி குற்றஞ்சாட்டியது.**

ஊடகவியலாளர் சந்திப்பின் போது ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார இந்த குற்றச்சாட்டை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- உள்ளூராட்சிச் சபைத் தேர்தலை நடத்துவதற்கு தமது கட்சி ஒரு வருட கால அவகாசம் தருவதாக ஜே.வி.பி தலைவர் அனுர குமார திஸாநாயக்க கூறியதை நாம் கேள்விப்பட்டோம். இதன் மூலம் உள்ளூராட்சி தேர்தலை ஒத்தி வைக்க ஜே.வி.பி அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துள்ளதா என்ற சந்தேகம் ஏற்படுகிறது.

உள்ளூராட்சித் தேர்தல் ஒத்தி வைக்கப்படுவதைத் தவிர்க்க ஐக்கிய மக்கள் சக்தி மட்டுமே தன்னால் முடிந்த அனைத்தையும் செய்துள்ளது. தேர்தலை ஒத்திவைத்ததற்கு எதிராக தேசிய மக்கள் சக்தி ஒரே ஒரு போராட்டத்தை நடத்தியது.

உள்ளூராட்சி தேர்தலுக்கான புதிய திகதியை நாளை (மார்ச் 3) அறிவிப்பார் என்று தேர்தல் ஆணைக்குழு தலைவர் உறுதியளித்தார், ஆனால் அது நடக்காது என்று நாங்கள் அஞ்சுகிறோம் - என்றார். (அ)



# மன்னார் சென்ற இ.போ.ச பஸ்ஸில் கஞ்சா கடத்திய இளைஞன் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 03

பஸ்ஸில் கஞ்சாவை எடுத்துச் சென்ற சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அனலைதீவு பகுதியைச் சேர்ந்த குறித்த சந்தேக நபர் காரைநகர் - மன்னார் அரச பஸ்ஸில் 4 கிலோ கஞ்சாவை எடுத்துச் செல்லும் வேளை சங்குப்பிட்டிப் பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டார்.

சந்தேகநபர் மேலதிக விசாரணைகளுக்காக பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

விசாரணைகளின் பின்னர் அவரை நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ)

# ரூபா பெறுமதி மேலும் உயர்வு

கொழும்பு, மார்ச் 03

அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாய் நேற்று மேலும் உயர்ந்துள்ளது.

அதன்படி கொள்முதல் விலை 343 ரூபா 97 சதமாகவும், விற்பனை விலை 356 ரூபா 73 சதமாகவும் பதிவாகியுள்ளதாக இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

நேற்று முன் தினம் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதி 10 மாதங்ளின் பின்னர் மீண்டும் உயர்வைக் காட்டியது. கொள்முதல் மற்றும் விற்பனை விலைகள் 351 ரூபா 72 சதம் மற்றும் 362 ரூபா 95 சதமாகவும் பதிவாகியிருந்தது.

கடந்த 2022 மே 4 ஆம் திகதிக்கு பின்னர் பதிவான அமெரிக்க டொலருக்கு நிகரான மிகக் குறைந்த ரூபா பெறுமதி இதுவாகும் என இலங்கை மத்திய வங்கி தெரிவித்திருந்தது.

இதற்கிடையில், யூரோ, ஸ்டெர்லிங் பவுண்ட், அவுஸ்திரேலிய டொலர், இந்திய ரூபா, கனேடிய டொலர் மற்றும் ஜப்பானிய யென் ஆகியவற்றுக்கு நிகரான இலங்கை ரூபாவின் பெறுமதியும் அதிகரித்துள்ளது. (அ)



# நிதிக்குழு தலைவர் பதவிக்கு மீண்டும் ஹர்ஷவின் பெயர்!

கொழும்பு, மார்ச் 03

வெற்றிடமாகியுள்ள பாராளுமன்றத்தின் அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்காக பாராளுமன்ற உறுப்பினர் கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயரை மீண்டும் பிரேரித்துள்ளதாக ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற நடவடிக்கைகள் தொடர்பான தெரிவுக்குழுவின் நேற்று முன்தினம் கூட்டத்தின்போது, இந்த பிரேரணை கட்சித் தலைவர்களிடம் சமர்ப்பிக்கப்பட்டதாக ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதம ஏற்பாட்டாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான லக்ஷ்மன் கிரியெல்ல குறிப்பிட்டார்.

அனைத்து எதிர்க்கட்சிகளினதும் இணக்கப்பாட்டுடன் தெரிவுக்குழுவின் தலைவர் பதவிக்கு கலாநிதி ஹர்ஷ டி சில்வாவின் பெயர் பிரேரிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், இந்த பிரேரணை தொடர்பில் சபாநாயகரின் தலைமையில் கூடவுள்ள அனைத்து கட்சிகளினதும் பிரதிநிதிகள் அடங்கிய பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அனுமதியை பெற வேண்டியுள்ளது.

கோப் மற்றும் கோபா குழுக்களின் தலைவர்களை அந்தந்த குழுக்களின் பெரும்பான்மையினரின் ஆதரவுடன் தெரிவு செய்கின்ற போதும், பாராளுமன்ற தெரிவுக்குழுவின் அங்கீகாரத்துடனே அரசாங்க நிதி தொடர்பான தெரிவுக்குழுவின் தலைவர் நியமனம் இடம்பெறுகின்றது.

ஆளும் கட்சியினரின் பிரேரணைக்கு அமைய ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க, அரசாங்க நிதி தொடர்பான பாராளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்ட நிலையில், அவர் பதவியை இராஜினாமா செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# லாவோஸுக்கு ஆட்கடத்தல் இதுவரை 15 முறைப்பாடுகள்

கொழும்பு, மார்ச் 03

தென்கிழக்காசிய நாடான - லாவோஸில் இடம் பெற்றதாக கூறப்படும் இலங்கையர்களுக்கு எதிரான மனிதக் கடத்தல் சம்பவங்கள் குறித்து இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்துக்கு நேற்று முன் தினம் வரை 15 முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

தாய்லாந்தில் வேலை வாய்ப்பை பெற்று தருவதாக பொய்யான உத்தரவாதத்தின் பேரில் இலங்கை இளைஞர்கள் பலர் லாவோஸில் சிக்கியுள்ளமை தொடர்பில் இந்த முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

ஏற்கனவே பணியகத்தால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள அம்பலாந்தோட்டையைச் சேர்ந்த ஆங்கில ஆசிரியர் ருவன் பத்திரன மற்றும் அவருக்கு உதவியதாகக் கூறப்படும் உள்ளூராட்சி வேட்பாளர் அனுர சேனாரத்ன ஆகியோருக்கு எதிராகவே இந்த முறைப்பாடுகள் அனைத்தும் கிடைக்கப்பெற்றுள்ளன.

இந்த முறைப்பாடுகள் அனைத்தும் தென் மாகாணத்தில் உள்ள இளைஞர்களால் செய்யப்பட்டுள்ளன.

ஒரு சிலரைத் தவிர, எஞ்சிய இலங்கையர்கள் இன்னும் லாவோஸில் சிக்கியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. கடத்தல்காரர்கள் இதற்கு முன்னர் நான்கு இளம் பெண்களையும் ஒரு இளைஞனையும் முதலில் தாய்லாந் துக்கும் பின்னர் லாவோஸுக்கும் அழைத்துச் சென்றுள்ளனர்.

இதற்காக அவர்கள், சீன நிறுவனம் ஒன்றிடம் இருந்து தலா 5,000 அமெரிக்க டொலர்களை பெற்றுள்ளனர்.

எனினும் இந்த இளைஞர்களின் தற்போதைய நிலை தொடர்பில் தகவல்கள் கிடைக்கவில்லை. (அ)

# சிறுபோகத்துக்கு தேவையான உரத்தை வழங்க நடவடிக்கை

கொழும்பு, மார்ச் 03



எதிர்வரும் சிறு போகத்திற்கு எந்த வித தட்டுப்பாடும் இன்றி குறித்த நேரத்தில் தேவையான உரத்தை விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதற்கான வேலைத்திட்டமொன்றும் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக, கமத்தொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

விவசாய அமைச்சின் 2023ஆம் ஆண்டுக்காக விவசாயத்துறை மேம்பாட்டுக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்து விளக்கமளிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டபோதே அமைச்சர் இவ்வாறு குறிப்பிட்டார்.

சிறு போகத்துக்கு மட்டுமன்றி கடந்த பெரும் போகத்தில் பயிரிட்ட விவசாயிகளுக்கும் இவற்றை விநியோகிக்க உள்ளதாகவும், இதனைச் சேகரித்து வைத்து அடுத்த போகத்திற்கேனும் பயன்படுத்த முடியும் எனவும் அவர் தெரிவித்தார்.

இம்முறை விவசாயிகளுக்கு ஒரு சலுகையாக 10,000 ரூபாவுக்கு யூரியா உரத்தை குறித்த நேரத்தில் வழங்க உள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

அத்துடன் கடந்த முறை 19,500 ரூபாவுக்கு வழங்கப்பட்ட பண்டி உரத்தை இம்முறை 10,000 ரூபாவுக்கு வழங்க உத்தேசித்துள்ளதாகவும் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கும் என்றும் அவர் நம்பிக்கை வெளியிட்டார். (அ)

# நோயாளர்கள் மீது விழுந்த மின்விசிறி!

கொழும்பு, மார்ச் 03

ஹொரணை மாவட்ட வைத்தியசாலையில், வாராந்த வைத்திய பரிசோதனைக்காகச் சென்ற இரண்டு நோயாளர்கள் மீது, மின் விசிறி ஒன்று கழன்று விழுந்த சம்பவம் பதிவாகியுள்ளது.

புற்றுநோய்க்கான வைத்திய பரிசோதனைக்குச் சென்ற நோயாளர்கள் இருவரே இந்தச் சம்பவத்துக்கு முகங்கொடுத்துள்ளனர்.

இதன்போது, குறித்த இருவரும் காயமடைந்த நிலையில், ஒருவர் அதே வைத்தியசாலையில் சிகிச்சைகளுக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். (அ)

# பொலிஸ்மா அதிபர் பதவிக்கு இம்முறை மும்முனைப் போட்டி

கொழும்பு, மார்ச் 03

புதிய பொலிஸ்மா அதிபர் பதவிக்கு மும்முனைப் போட்டி தொடங்கியுள்ளது.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன், சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் லலித் பத்திநாயக்க மற்றும் சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹண ஆகியோருக்கிடையில் இந்த மும்முனைப் போட்டி நிலவுகிறது.

தற்போதைய பொலிஸ் மா அதிபர் சி.டி.விக்ரமரத்ன தனது சேவையை முடித்து இந்த மாதம் 20ஆம் திகதி ஓய்வு பெறவுள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பதவிக்கு மேற்படி சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர்கள் சார்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை தனித்தனியான சந்தித்து பல சிரேஷ்ட அமைச்சர்கள் சிபார்சு செய்துள்ளனர் என ஜனாதிபதி செயலகத் தகவல்கள் தெரிவித்தன. (அ)

# தேர்தலில் போட்டியிடும் அரச ஊழியருக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் ஆராய்வு

கொழும்பு, மார்ச் 03

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் மேலும் ஒத்திவைக்கப்படுமானால், தேர்தலில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களைத் தாக்கல் செய்துள்ள அரச ஊழியர்களுக்கு சம்பளம் வழங்குவது தொடர்பில் ஆராயப்பட்டு வருகின்றது.

இது தொடர்பில் அமைச்சரவைப் பத்திரமொன்று முன்வைக்கப்படவுள்ளது என்று இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர தெரிவித்தார்.

தேர்தல் ஆணைக்குழு நாளை எடுக்கவுள்ள முடிவை அடிப்படையாகக் கொண்டு, இது சம்பந்தமாக சட்டமா அதிபரிடம் ஆலோசனை பெறப்படும் எனவும் அவர் கூறினார். உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்காக சுமார் 3 ஆயிரம் வரையான அரச ஊழியர்கள் வேட்பு மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

எனினும், தேர்தல் ஒத்திவைக்கப்பட்டுள்ளதால், அவர்கள் சம்பளம் பெறுவதில் நெருக்கடி நிலை உருவாகியுள்ளது. (அ)

# நாணய நிதிய உடன்பாடு இம்மாதம் கைச்சாத்தாகும்

## ஜனாதிபதியின் ஆலோசகர்கள் நம்பிக்கை

கொழும்பு, மார்ச் 03

இலங்கை அரசாங்கம் சர்வதேச நாணய நிதியத்துடன் நாட்டிற்கான பிணை எடுப்புப் பொதி தொடர்பான இறுதி ஒப்பந்தத்தில் இம்மாதத்தில் கைச்சாத்திடவுள்ளதாகவும் அதன் பின்னர் சர்வதேச நன்கொடையாளர்கள் மற்றும் சில நாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கப்பெறும் எனவும் ஜனாதிபதியின் இரண்டு ஆலோசகர்களை மேற்கோள் காட்டி ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடனான இறுதி உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டவுடன் ஜப்பான், சீனா, அமெரிக்கா, ஆசிய அபிவிருத்தி வங்கி மற்றும் உலக வங்கி ஆகியவற்றிடமிருந்து இலங்கைக்கு அதிக உதவிகள் கிடைக்கும் என ஜனாதிபதியின் ஆலோசகர்களான ருவன் விஜேவர்தன மற்றும் சாகல ரத்நாயக்க ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

"நாட்டில் ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடிக்குப் பிறகு, சமீபகாலமாக இளைய தலைமுறையினர் அரசியல்வாதிகள் மீதான நம்பிக்கையை இழந்துள்ளனர் என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.

அரசாங்கத்தை பொறுப்பேற்குமாறு எதிர்க்கட்சிகளுக்கு அழைப்பு விடுத்த முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு, தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மட்டுமே பதிலளித்தார்.

ஜனாதிபதியால் வரிசைகளை நிறுத்தி ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த முடிந்தது. தேசத்தின் நலனுக்காக இளைஞர்கள் தங்கள் பங்கை ஆற்றி தேசத்திற்கு நிதி உறுதிப்பாட்டை ஏற்படுத்த ஒத்துழைக்குமாறு நாங்கள் அழைப்பு விடுக்கின்றோம்" என சாகல ரத்நாயக்க கூறினார்.

இதேவேளை, பிணை எடுப்பு பொதியை பெறுவதற்கான நிபந்தனையாக, இரு தரப்பு கடன்கொடுநர்களின் கடன்மறுசீரமைப்பை மாத்திரமே சர்வதேச நாணய நிதியம் கருத்திற் கொள்ளும் என்றும் நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரியொருவரை மேற்கோள் காட்டி பிசினஸ் டைம்ஸ் அண்மையில் செய்தியொன்றை வெளியிட்டிருந்தது.

இந்த பிணையெடுப்பு செயல்முறையில் பலதரப்புக் கடன் மற்றும் வணிகக்கடன் என்பன கருத்திற் கொள்ளப்படுவதில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

இதுவரையில், இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் உள்ளிட்ட பாரிஸ் கிளப் நாடுகளும் நிதியியல் உறுதிப்பாடுகளை வழங்கியுள்ளன.

எவ்வாறாயினும், சீனாவின் எக்ஸிம் வங்கியினால் வழங்கப்பட்டுள்ள கடன் மீள் செலுத்துவதற்கான இரண்டு வருட கால அவகாசம் போதுமானதல்ல என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்ததாக கூறப்பட்டது.

எனினும், இலங்கைக்கு வழங்கிய கால அவகாசத்தை சீனா மீண்டும் ஒரு முறை உறுதி செய்திருந்தது. (அ)

## வெங்காயம் விலை வீழ்ச்சி

கொழும்பு, மார்ச் 03

புறக்கோட்டை மொத்த சந்தையில் பெரிய வெங்காயம் கிலோவொன்றின்விலை தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதன்படி, பெரிய வெங்காயம் கிலோவொன்றின் மொத்த விலை 95 ரூபாவாக காணப்படுவதாக அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த வாரம் பெரிய வெங்காயம் கிலோ ஒன்றின் மொத்த விலை 130 ரூபாவாக காணப்பட்டது. இதேவேளை, இறக்குமதி செய்யப்படும் உருளைக் கிழங்கு கிலோவொன்றின் விலையும் குறைவடைந்துள்ளது.

கடந்த வாரம் 150 ரூபாவுக்கு விற்பனை செய்யப்பட்ட உருளைக்கிழங்கு கிலோவொன்று தற்போது 130 ரூபாவாக குறைவடைந்துள்ளதாக அத்தியாவசிய பொருள் இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அத்துடன் வெள்ளைச் சீனி கிலோவொன்றின் மொத்த விலை 220 ரூபாவாக காணப்படுவதாக அந்த சங்கம் குறிப்பிட்டுள்ளது. (அ)



## அராலியில் வீட்டுக்கு முன்பாக கைவிடப்பட்ட மோ. சைக்கிள்!

யாழ்ப்பாணம், மார்ச் 03

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி மேற்கு பகுதியில் வீடு ஒன்றிற்கு முன்னால் கைவிடப்பட்ட நிலையில் மோட்டார் சைக்கிள் ஒன்று நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இந்த சம்பவம் நேற்று பதிவாகியது.

மோட்டார் சைக்கிள் பாகங்கள் சில கழற்றப்பட்ட நிலையில் வீடு ஒன்றுக்கு முன்னால் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

இது குறித்து வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்திற்கு தகவல் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (அ)

## பிரிட்டன் உள்துறை அலுவலகத்துடன் போராடி வென்றார் இலங்கைப் பெண்!

கொழும்பு, மார்ச் 03

நாடு கடத்தப்படும் நிலைமையை எதிர்கொண்டிருந்த இலங்கையைச் சேர்ந்த 64 வயதான பெண்ணொருவர், கடந்த ஆறு ஆண்டுகளாக பிரித்தானியாவின் உள்துறை அலுவலகத்துடன் போராடி அந்த நாட்டிலேயே தங்கியிருப்பதற்கான உரிமையை வென்றுள்ளார்.

த இன்டிபென்டன்ட் இணையம் இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

66 வயதான சுசிதா பாலசுப்பிரமணியம் என்ற இலங்கை பெண் தனது குழந்தைகள் மற்றும் பேரக்குழந்தைகளை விட்டு இலங்கைக்கு மீள திரும்புமாறு உத்தரவிடப்பட்டார்.

பல ஆண்டுகளாக இங்கிலாந்தில் பணிபுரிந்த அவரின் கணவரான 74 வயதான சண்முகம் சமீபத்தில் ஓய்வுபெற்றதை அடுத்து தேவையான அனுசரணை வருமான வரம்பை காரணம் காட்டி இலங்கைப் பெண்ணை நாடு கடத்த இங்கிலாந்தின் உள்துறை அமைச்சு நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தது.

1994 ஆம் ஆண்டு இங்கிலாந்துக்கு சென்ற சுசிதாவின் கணவரான பாலசுப்பிரமணியனுக்கு உள்துறை அலுவலகம் ஏதிலி அந்தஸ்து வழங்கியது.

அவர்களின் நான்கு குழந்தைகளும் அடுத்தடுத்த ஆண்டுகளில் அவருடன் சேர்ந்து ஏதிலி அந்தஸ்தையும் பெற்றனர். இந்த நிலையில் சுசிதாவும் 2014 இல் துணை விசாவில் அவர்களுடன் இணைந்து கொண்டார்.

இதில் பாலசுப்பிரமணியம் ஓய்வூதியம் மற்றும் தனிப்பட்ட நிதியை சேமித்திருந்தாலும் கூட, அனுசரணைக்கான 18,600 ஸ்ரேலிங் பவுண் வேலைவாய்ப்பு வருமானத்தைக் காட்டவேண்டும் என்று உள்துறை அலுவலக குடியேற்ற விதிகளை கோடிட்டு சுசிதாவை நாடு கடத்தும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன.

எனினும், இந்த தம்பதியினர், தங்களுக்கு தமது பிள்ளைகளால் நிதியுதவி இருப்பதாக வாதிட்டனர். ஆனால் அது நிராகரிக்கப்பட்டது.

இந்த நிலையில் நீதிமன்றில் மேன்முறையீடு செய்ய அனுமதி வழங்கியதைத் தொடர்ந்து, சுசிதா பாலசுப்பிரமணியம் பிரித்தானியாவில் தங்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (அ)

## டயனா கமகேயின் பிரஜாவுரிமை; நீதிமன்றில் வாதப்பிரதிவாதங்கள்



கொழும்பு, மார்ச் 03

இராஜாங்க அமைச்சர் டயானா கமகே குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்தை மீறியதாக கூறப்படும் வழக்கில், நேற்று காலை நீதிமன்றத்தில், மனுதாரர் மற்றும் பிரதிவாதி சட்டத்தரணிகளுக்கு இடையில் காரசாரமான கருத்து பரிமாற்றம் இடம்பெற்றதாக தெரிவிக்கப்படுகிறது.

கமகேயின் சட்டத்தரணி ஜனாதிபதி சட்டத்தரணி ஷவீந்திர பெர்னாண்டோ மற்றும் ஜனாதிபதி சட்டத்தரணி குணரத்ன வன்னிநாயக்க உள்ளிட்ட எதிர்தரப்பு சட்டத்தரணிகள் ஆகிய இரு தரப்புக்கும் இடையில் வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றுள்ளன.

இதனையடுத்து, வழக்கை மறு அறிவித்தல் வரை ஒத்தி வைப்பதாக கொழும்பு பிரதான நீதவான் பிரசன்ன அல்விஸ் உத்தரவிட்டார்.

சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத், கையூட்டல் மற்றும் ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிக்கும் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்ததை அடுத்து, குடியுரிமை தொடர்பான குற்றச்சாட்டுகள் காரணமாக இராஜாங்க அமைச்சர் தற்போது தனது பாராளுமன்ற உறுப்பினர் பதவியை இழக்கும் அபாயத்தில் உள்ளார்.

இராஜாங்க அமைச்சருக்கு பிரித்தானிய குடியுரிமை உள்ளமையால், இராஜதந்திர கடவுச்சீட்டை அவருக்கு வழங்குவது குடிவரவு மற்றும் குடியகல்வு சட்டத்திற்கு எதிரானது என சமூக ஆர்வலர் ஓஷல ஹேரத் குற்றம் சுமத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (அ)

## இலங்கைக்கு ஒவ்வொரு ஆண்டும் 1500 இடங்களை ஒதுக்கும் இந்தியா



கொழும்பு, மார்ச் 03

இந்திய பாதுகாப்புப் படைகள் ஒவ்வொரு ஆண்டும் சுமார் 1,500 பயிற்சி இடங்களை இலங்கைக்கு வழங்குகின்றன.

அவற்றுக்கு ஆண்டுதோறும் 7 மில்லியன் அமெரிக்க டொலர்கள் நிதியுதவியுடன் சிறப்புத் திட்டத்தின் மூலம் நிதியளிக்கப்படுவதாக இந்திய துணை தூதுவர் வினோத் கே. ஜேக்கப் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங் கைக்கும் இடையிலான இரு தரப்பு பாதுகாப்பு ஒத்துழைப் பின் வலிமையான மற்றும் நீடித்த தூண் பயிற்சியே இது வாகும் என்றும் அவர் குறிப் பிட்டார்.

கொழும்புக்கு வருகைத்தந்த இந்திய கடற்படை கப்பலான சுகன்யாவில் பயிற்சி பெற்ற இலங்கை பாதுகாப்பு படை வீரர்களிடம் உரையாற்றும் போது அவர் இந்த விடயங்களை தெரிவித்தார். (அ)

# இலங்கைக்கு நேர்ந்தது பாகிஸ்தானுக்கும் ஏற்படுமா?

## சீன கடன் குறித்து பொருளாதார நிபுணர்கள் கவலை தெரிவிப்பது ஏன்?



பாகிஸ்தானின் மத்திய நிதியமைச்சர் இஷாக் டார், சீனாவிடம் இருந்து 700 மில்லியன் டாலர் கடனாக கிடைக்கப்போவதாக அறிவித்தார். பாகிஸ்தானின் குறைந்து வரும் அந்நியச் செலாவணி கையிருப்பு சிறிது அதிகரிப்பது அவரது மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்கலாம். ஆனால் சீனா மற்றும் சீனவங்கிகளில் இருந்து பெற்ற கடன்கள் இப்போது பாகிஸ்தானின் மொத்த கடனில் மூன்றில் ஒரு பங்காக ஆகிவிட்டது.

பாகிஸ்தானின் மொத்த கடனில், கடந்த எட்டு ஆண்டுகளில் சீனா மற்றும் சீன வணிக வங்கிகளிடம் இருந்து பெற்ற கடன்களில் குறிப்பிடத்தக்க அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

இத்தகைய சூழ்நிலையில் பாகிஸ்தானின் தற்போதைய பொருளாதார நிலைக்கு வெளிநாட்டுக் கடன்களை திரும்பச்செலுத்துவதே ஒரு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது, இதன் காரணமாக நாட்டின் அந்நிய செலாவணி கையிருப்பு கணிசமாகக் குறைந்து வருகிறது.

நடப்பு நிதியாண்டிலும், அடுத்த இரண்டு நிதியாண்டுகளிலும் பாகிஸ்தான், வெளிநாட்டு கடனாக பெரும் தொகையை திரும்பச்செலுத்த வேண்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

நடப்பு நிதியாண்டின் மீதமுள்ள மாதங் களில், எட்டு பில்லியன் டாலர் மதிப்புள்ள வெளிநாட்டுக் கடனை பாகிஸ்தான் திருப் பிச் செலுத்த வேண்டும்.

அடுத்த இரண்டு ஆண்டுகளில் 50 பில்லியன் டாலர் வெளிநாட்டு கடனை திரும்ப அடைப்பது பாகிஸ்தானுக்கு மிகப்பெரிய சவாலாக இருக்கும். சீனா மற்றும் சீன வணிக வங்கிகளுக்கு திரும்பச் செலுத்த வேண்டிய கடனும் இதில் அடங்கும்.

சீனாவிடமிருந்து பெற்ற கடனைத் திருப்பிச் செலுத்தும் வசதி, பாகிஸ்தானின் பொருளாதாரத்தின் மீதான ஆபத்தை நிச்சயமாகக் குறைக்கும் என்று பாகிஸ்தான் பொருளாதார வல்லுநர்கள் நம்பு கின்றனர். ஆனால் இதனுடன், பிற நாடு கள் மற்றும் சர்வதேச நிதி நிறுவனங்களிடமிருந்து கடன்களை மறுசீரமைப்பதும் மிகவும் முக்கியமானது.

நடப்பு நூற்றாண்டின் முதல் தசாப்தத் தில், பாரிஸ் கிளப்பின் உறுப்பு நாடுகள் வழங்கிய கடனின் விகிதம் பாகிஸ்தானின் மொத்தக் கடனில் பெரும் பகுதியாக இருந்தது. ஆனால் கடந்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளில், சீனா வழங்கிய கடன் மிக அதிகமாக உள்ளது. இதனுடன் சீன வங்கிகளின் கடனும் பெருமளவு அதிகரித்துள்ளது.

சீன கடன் அதிகரிப்புக்கு பாகிஸ்தான் - சீனா பொருளாதார வழித்தடமும் ஒரு காரணம் என்று பொருளாதார வல்லுநர்கள் கருதுகின்றனர். இதில் சீனாவிடமிருந்து எரியாற்றல் மற்றும் உள்கட்டமைப்பு திட்டங்களுக்காக கடன் வடிவில் பணம் பெறப்பட்டது. மேலும் அந்நிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க வேண்டும் என்ற காரணத்திற்காக சீன வணிக வங்கிகளிடமிருந்தும் கடன் பெறப்பட்டது.

இதற்கு சமீபத்திய உதாரணம் சீன வளர்ச்சி வங்கியின் 700 மில்லியன் டாலர் கடன். அன்னிய செலாவணி கையிருப்பை அதிகரிக்க இது உதவும் என்று இது குறித்து நிதியமைச்சர் இஷாக் டார் கூறினார். ஆனால், பாகிஸ்தானின் பொருளாதாரச் சிக்கலுக்கு இந்தக் கடன்தான் உண்மையான காரணமா என்ற கேள்வி எழுகிறது.

இந்தக் கேள்விக்கான பதிலைக் கண்டறிய நிபுணர்களிடம் பேசுவதற்காக பாகிஸ்தான் நிதி அமைச்சக அதிகாரிகளை தொடர்பு கொண்ட போதிலும்கூட இதற்கு எந்த பதிலும் கிடைக்கவில்லை.

நிதியமைச்சர் இஷாக் தார், நிதித்துறை இணை அமைச்சர் டாக்டர் ஆயிஷா கவுஸ் பாஷா மற்றும் நிதி அமைச்சகத்தின் செய்தித் தொடர்பாளர் ஆகியோர் இது தொடர்பாக செய்யப்பட்ட அழைப்புகள் மற்றும் செய்திகளுக்கு பதிலளிக்கவில்லை.

**பாகிஸ்தானின் மொத்த கடனில் சீனா தந்தது எவ்வளவு?**

பாகிஸ்தானின் மொத்த வெளிநாட்டுக் கடன் தற்போது 97 பில்லியன் டாலர்களை தாண்டியுள்ளது. இதில் சர்வதேச நிதி நிறுவனங்கள், பல்வேறு நாடுகள், வெளிநாட்டு வணிக வங்கிகள் மற்றும் சர்வதேச பத்திரச் சந்தை ஆகியவற்றிற்கு செலுத்த வேண்டிய கடன்களும் அடங்கும்.

இந்த கடனில் பாரிஸ் கிளப், ஐஎம் எஃப், உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி மற்றும் பிற சர்வதேச நிதி நிறுவனங்களின் கடன்களும் அடங்கும் என்று பாக்கிஸ்தான் ஸ்டேட் வங்கி தெரிவிக்கிறது.

கடந்த ஏழு ஆண்டுகளில் பாகிஸ்தானின் கடன்களை பார்க்கும்போது, 2015ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 24 வீதமாக இருந்த வெளிநாட்டு கடன், 2022ல் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 40 வீதமாக அதிகரித்துள்ளது.

பாகிஸ்தானின் மொத்த கடனில் சர்வதேச நிதி நிறுவனங்கள், பிறநாடுகள் மற்றும் வணிக வங்கிகள் வழங்கிய கடன்களும் அடங்கும், ஆனால் பாகிஸ்தான் அரசு மற்றும் மத்திய வங்கியின் அறிக்கைகளில், அந்தக் கடன்கள் ‘பாரிஸ் கிளப்’ மற்றும் ‘பாரிஸ் அல்லாத கிளப்’ ஆகியவற்றிலிருந்து பெறப்பட்டதாக காட்டப்பட்டுள்ளது. இந்தக் கடன் தொடர்பாக எந்த நாட்டின் பெயரும் குறிப்பிடப்படு வதில்லை.

இருப்பினும் சர்வதேச செலாவணி நிதியம் கடந்த மறுஆய்வுப் பணிக்குப் பிறகு சமர்ப்பித்த பாகிஸ்தானின் கடன் விவர அறிக்கையில், பாகிஸ்தானின் மொத்தக் கடனில் சீனாவின் பங்கு 30 வீதமாக இருந்தது.

சீன அரசு இதுவரை 23 பில்லியன் டாலர் கடனை வழங்கியுள்ளது என்று சர்வதேச செலாவணி நிதியம் கூறுகிறது. அதே நேரம் சீன வணிக வங்கிகள் இது வரை சுமார் 7 பில்லியன் டாலர் கடனை வழங்கியுள்ளன.

‘சீன வணிக வங்கிகள் கொடுத்த கட னும் சீனா கொடுத்த கடன்தான். பாகிஸ் தானில் உள்ள தேசிய வங்கிகள் அரசால் நடத்தப்படுவது போல் சீனாவின் வணிக வங்கிகளும் அரசின் மேற்பார்வையில் இயங்குகின்றன என்பதை புரிந்து கொள்ள வேண்டும்,” என்று பொருளாதார வல்லுநர் அம்மார் ஹபீப் கான் தெரிவித்தார்.

**சீனாவின் கடன் அதிகரித்தது ஏன்?**

பாகிஸ்தானின் மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனாவும் அதன் வணிக வங்கிகளும் சுமார் 30 சதவிகித பங்கை கொண்டுள்ளன. கடந்த நிதியாண்டின் கடன் திரும்பச் செலுத்தல் புள்ளிவிவரங்களைப் பார்த்தால், சீனா மற்றும் சீனாவின் வணிக வங்கிகளுக்கு அதிகபட்ச கடன் திருப்பி செலுத்தப்பட்டுள்ளது.

நடப்பு நிதியாண்டின் முதல் காலாண்டில், சவூதி அரேபியாவுடன் ஒப்பிடுகை யில் சீனாவுக்கு வட்டி உட்பட 500 மில்லியன் டாலருக்கும் அதிகமான தொகை திரும்ப செலுத்தப்பட்டுள்ளதாக பொரு ளாதார விவகாரப் பிரிவின் இணையதளத்தில் கடன் திருப்பிச் செலுத்தும் தரவுகள் தெரிவிக்கின்றன. சவூதி அரேபியா, ஜப்பான், குவைத் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு திருப்பிச் செலுத்திய கடன் தொகை மிகவும் குறைவாக இருந்தது.

இதேபோல் பெரும்பாலும் சீன வணிக வங்கிகளை உள்ளடக்கிய வெளிநாட்டு வணிக வங்கிகளுக்கு திருப்பிச் செலுத்தப் பட்ட கடன்களின் அளவும் அதிகமாக உள்ளது.

கடந்த ஏழு அல்லது எட்டு ஆண்டுகளில் பாகிஸ்தானின் மொத்த வெளிநாட்டுக் கடனில் சீனக் கடன் அதிகரித்திருப்பது குறித்து பேசிய பாகிஸ்தானின் முன்னாள் நிதியமைச்சர் டாக்டர் ஹபீஸ் பாஷா, ‘சீனா மூன்று வகையான கடன்களை வழங்குகிறது. சிபிஇசி திட்டத்திற்காக சீனா கடன் வழங்கியது. இரண்டாவது கடன் சீன வணிக வங்கிகளால் வழங்கப்பட்டது. மூன்றாவது கடன் ஸ்டேட் பாங்க் ஆஃப் பாகிஸ்தானில் சீனா டெபாசிட் செய்த தொகை,” என்று கூறினார்.

‘பாகிஸ்தானின் கடனில் சீனக் கடன்கள் அதிகரிப்பதற்குக் காரணம், சிபிஇசி திட்டங்களுக்காக வழங்கப்பட்ட கடன் மற்றும் பாகிஸ்தானுக்கு சீனா வழங்கிய வைப்புத்தொகையாகும். இதன் காரணமாக பாகிஸ்தான் மீதான சீனாவின் மொத்த கடன் 25 முதல் 30 சதவிகிதம் அதிகரித்துள்ளது,” என்று ஜேஎஸ் ரிசர்ச்சின் பொருளாதார விவகார நிபுணர் அம் ரீன் சொரானி குறிப்பிட்டார்.

”சிபிஇசி இன் பல்வேறு நோக்கங்களுக்காக சீனா மற்றும் அதன் வணிக வங்கிகளால் பாகிஸ்தானுக்கு கடன்கள் வழங் கப்பட்டன. இருப்பினும் இந்த நேரத்தில் பாகிஸ்தானுக்கு சவாலாக இருக்கும் கடன்கள், சீனா மற்றும் அதன் வணிக வங்கிகளால் நடப்புக் கணக்குப் பற்றாக்குறையைக் குறைக்கவும் அந்நியச் செலாவணி கையிருப்பை அதிகரிக்கவும் கொடுக்கப் பட்டவை,” என்று இஸ்லாமாபாத்தில் உள்ள பொருளாதார விவகாரங்கள் மூத்த பத்திரிகையாளர் ஷாபாஸ் ராணா கூறினார்.

‘சிபிஇசி இல் எரிசக்தி துறையில் கொடுக்கப்பட்ட கடன்கள் சுதந்திர மின் உற்பத்தியாளர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் அவை பாகிஸ்தானின் மொத்தக் கடனில் சேர்க்கப்படவில்லை, இருப்பினும் சிக்கர் முல்தான் மோட்டார்வே, தாகோட் மோட்டார்வே போன்ற உள்கட்டமைப்பு திட்டங்களுக்கு வழங்கப்பட்ட திட்டங்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ளன,” என்று அவர் மேலும் தெரிவித்தார்.

**பாகிஸ்தானின் பொருளாதார நெருக்கடிக்கு சீனாவின் கடன்தான் உண்மையான காரணமா?**

சீன கடனை திருப்பிச் செலுத்துவதில் உள்ள சிரமங்களைப் பற்றிப் பேசிய ஷாபாஸ் ராணா, ‘சீனக் கடனைத் திருப்பிச் செலுத்தும் விஷயம் வரும்போது, வெளிநாட்டு நிதித் தேவைகளுக்காக பாகிஸ்தான் வாங்கிய கடன்கள்தான் பிரதானமாக உள்ளது. இவை வணிக வங்கிகளிடமிருந்து பெறப்பட்டவை ,”என்று கூறினார்.

‘இந்த சீன கடனை திருப்பிச் செலுத்தும் காலம் ஒன்றரை முதல் இரண்டு ஆண்டுகள். கடனின் முதிர்வு மிக விரைவில் வரும். இதன் காரணமாக அந்நிய செலாவணி பற்றாக்குறையால் பாதிக்கப்பட்டுள்ள பாகிஸ்தான் போன்ற நாடு சிக்கல்களை எதிர்கொள்கிறது,” என்றார் அவர்.

பாரிஸ் கிளப்பின் கீழ் கிடைக்கும் கடன்களின் திருப்பிச் செலுத்தும் காலம் நீண்டது. இது 15-20 ஆண்டுகள் முதல் 25-30 ஆண்டுகள் வரை இருக்கும். இருப்பினும் சீன வணிக வங்கிகளின் கடன் திருப்பிச் செலுத்தும் காலம் குறைவாக உள்ளது என்றும் ஷாபாஸ் ராணா கூறினார்.

சீன கடனை திருப்பிச் செலுத்துவதில் பெரிய சிரமம் எதுவும் இல்லை என்று இது தொடர்பாக அம்மார் ஹபீப் குறிப் பிட்டார். இவை ரோல் ஓவர் ஆகிவிடும் என்றார் அவர்.

இந்தக் கடன் ஓரிரு வருடங்களுக்கானது. இதை ரோல் ஓவர் செய்யவேண்டும் என்று இரு தரப்பினருக்கும் தெரியும். ஆகவே அது ரோல் ஓவர் ஆகிவிடும் என்று அவர் சுட்டிக்காட்டினார்.

‘திட்டங்களுக்காக வழங்கப்படும் கடன் காலம் நீண்டது. டெப்பாசிட் செய்யும் ஒரு செயல்முறை உள்ளது. பிற நாடுகளின் வைப்புத்தொகைகளை போலவே சீன வைப்புத்தொகைக்கும் இது பொருந்தும்,” என்று அம்ரின் சொரானி குறிப்பிட்டார்.

பாகிஸ்தானின் மொத்தக் கடனில் சீனக் கடனின் பங்கு அதிகரித்துள்ளது, அதாவது பாகிஸ்தான் இப்போது

(09ஆம் பக்கம் பார்க்க)



# ஈழத்துத் தமிழர்தம் கலைமரபுகளின் முதுசொம் ஒன்று மறைந்தது

**து.கௌரீஸ்வரன்**

ஈழத்தின் மூத்த பறையிசைக் கலைஞரும் உள்ளூர் அறிவு முறைமைகளில் நீண்ட அனுபவங்களும் கொண்ட ஆளுமையுமான கலாபூசணம் க.பரசுராமன் ஐயா அவர்கள் 27.02.2023 அன்று இயற்கையடைந்து விட்டதான செய்தி நம்பண்பாடுகளின் முதுசொம் ஒன்றை இழந்துவிட்ட அங்கலாய்ப்பை எம்முள் ஏற்படுத்தி நிற்கின்றது.

பறையும், பறையிசையும் தமிழர் பண்பாட்டின் தொன்மையினை எடுத்துக் காட்டும் கலையடையாளம். ஆனால் நீண்ட வரலாற்றுப் பெருமை பேசும் தமிழரில் கணிசமானோர் பறையையும், பறையிசையினையும், அதைப்பயின்று பாதுகாத்து வரும் மனிதர்களையும் கவனத்திற்கொள்ளாத வகையிலேயே வாழ்ந்து வருகின்றார்கள். தமது வரட்டுத்தனமான ஆதிக்க மனோபாவங்களை இக்கலையை மையப்படுத்தி வெளிக்காட்டி வருவதையும் காண்கின்றோம். இங்குதான் தமிழரின் தொன்மை பற்றி கூக்குரலிடுவதன் உள்ளார்ந்த அர்த்தம் குறித்துக் கேள்வி எழுப்ப வேண்டி இருக்கிறது.

தமிழர்தம் பண்பாடுகளின் தொன்மையான ஒரு கலை மரபை அதன் உயிர்ப்புக் கெடாமல் பல்வேறு அகப் புறச் சவால்களை, மனத்தாக்கங்களை, அவமானங்களை எல்லாம் எதிர்கொண்டு பாதுகாத்து முன்கொண்டு செல்வதில் கணிசமான உள்ளூர்க் கலைஞர்கள் மிகுந்த உறுதியுடன் செயலாற்றி வருவதனைக் காண்கின்றோம். அதாவது பார்ப்பனிய சாதி ஏற்றத்தாழ்வுகள், காலனித்துவத்தின் நவீனமயமாக்கல் நடவடிக்கைகள் என்பவை தோற்றுவித்த பல்வேறு சவால்களை எதிர்கொண்டு தமிழரின் தொன்மைமிகு பறையிசைக் கலையினைப் பயின்று முன்னெடுப்பதில் மூத்த பறையிசைக் கலைஞர்கள் ஈடுபட்டு வந்துள்ளார்கள், இன்றும் வருகின்றார்கள்.

இத்தகைய கருத்துத்தெளிவு கொண்ட கலைஞர்களுள் ஒருவராகவே கலாபூசணம் க.பரசுராமன் ஐயா அவர்கள் இயங்கி வந்தார். மட்டக்களப்பு களுதாவளையைச் சேர்ந்த முதுபெரும் பறையிசைக் கலைஞரான வையன் ஆனைக்குட்டி அவர்களின் மருகனான இவர் அவருக்குப்பின்னர் பறையிசைக் கலைக்கேயுரிய வித்துவங்கள் நிறைந்த பெரும் கலை ஆளுமையாக இயங்கி வந்தவர். பறையில் வாசிக்கப்படும் தாளங்களைச் சொற்கட்டுக்களில் பாடிக் காட்டிப் பயிற்றுவிக்கும் வித்துவம் நிறைந்தவர், சொர்ணாளி இசைப்பதில் மிகுந்த தேர்ச்சி பெற்றவர்.

தமிழரின் தொன்மைமிகு கலையான பறையிசை தமிழ்ப்பண்பாடுகளின் சாபக்கேடாகவுள்ள சாதி ஏற்றத்தாழ்வுகள் காரணமாகவும், காலனித்துவத்தின் நுகர்வுப் பண்பாட்டுருவாக்கத்தின் தாக்கத்தினாலும் வலுவிழந்து



மறைந்து போகக்கூடிய ஆபத்தான சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டுப் பின்புலத்தில் அக்கலையின் இருப்பையும் இயக்கத்தையும் மதிப்பிற்கும், மாண்பிற்கும் உரியதாக நிலைநிறுத்தி முன்னெடுக்கும் தூரநோக்குடன், ஆக்கபூர்வமான காரியங்களில் தமிழ்ச் சூழல்களில் தனிநபர்களும், அமைப்புக்களும், கல்வி நிறுவனங்களும் செயலாற்றி வருவதனைக் காணமுடிகின்றது. இச்செயற்பாடுகள் பறையிசைக் கலையினைக் காலங்காலமாகப் பயின்று வரும் கலைஞர்களை மையப்படுத்தியதாக இருந்து வருகின்றன.

இந்தவகையில் 1990 களிலிருந்து பறையிசைக் கலை தொடர்பாக மட்டக்களப்பில் முன்னெடுக்கப்பட்டு வரும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் பிரதான நபராக திரு.க.பரசுராமன் அவர்கள் செயலாற்றி வந்துள்ளார். கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறை, சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவம், மூன்றாவதுகண் உள்ளூர் அறிவு திறன் செயற்பாட்டுக் குழு முதலியவை பறையிசை தொடர்பாக முன்னெடுத்த பல்வேறு காத்திரமான செயற்பாடுகளின் பங்குதாரனாக இவர் செயலாற்றியுள்ளார்.

குறிப்பாக கிழக்குப்பல்கலைக்கழக நுண்கலைத்துறையின் பண்பாட்டு இசையணியில் பறையிசையினைப் பொருத்தமான விதத்தில் இணைத்துக் கொள்வதற்கும் அதற்கான பயிற்சிகளை இசையணியின் ஆரம்பகால மாணாக்கருக்குப் பயிற்றுவிப்பதிலும் இவர் மிகுந்த ஆர்வத்துடன் பங்குபற்றியிருந்தார். இத்தோடு நுண்கலைத் துறையால் ஏற்பாடு செய்யப்பட்டு நடத்தப்பட்ட உலக நாடக தின விழா, மாமாங்கத்திருவிழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட பாரம்பரிய அரங்க விழா என்பவற்றில் ஆரம்ப நிகழ்ச்சியாக பறைமேளக் கூத்தினை இடம்பெறச் செய்வதற்கு இவரின் பங்களிப்பு முக்கியமானதாக இருந்துள்ளது. இதேபோல் சுவாமி விபுலானந்த அழகியற் கற்கைகள் நிறுவகத்தினால் முன்னெடுக்கப்பட்ட பறையிசை தொடர்பான நடவடிக்கைகளிலும் இவரின் பங்களிப்பு இருந்துள்ளது.

இதேபோல் மூன்றாவதுகண் நண்பர்கள் குழுவினால் முன்னெடுக்கப்பட்ட உள்ளூர்க் கூத்துக்களில் பறையறைவோன் பாத்திரத்தை மீளுருவாக்கஞ் செய்யும் நடவடிக்கையிலும் மட்டக்களப்பின் மூத்த அண்ணாவிமாருடன் திரு.க.பரசுராமன் அவர்கள் குறிப்பிடத்தக்க பங்களிப்பு வழங்கினார். அதாவது பறையறைவோன் பாத்திரத்தை கௌரவமும் மதிப்புமிக்க அரச செய்தி அறிவிப்பாளனாக மிளுருவாக்கும் செயற்பாட்டில் பறையிசை தொடர்பாகவும், அதன் இசை நுட்பங்கள் தொடர்பாகவும் ஆக்கபூர்வமான கருத்துக்களைப் பகிர்ந்து கூத்துக்களில் பறையறைவோன் பாத்திரத்தை காலத்திற்கேற்ப தகவமைப்பதற்கு காரியமாற்றியிருந்தார்.

தமிழ்ப்பண்பாடுகளில் விளிம்பு நிலைச் சமூகங்கள் மீது ஆதிக்க சமூகங்கள் நேரடியாகவும், மறைமுகமாகவும் மேற்கொண்ட நெருக்குவாரங்கள், இனத்துவ அடையாள அரசியல் ஏற்படுத்திய தாக்கங்கள், நவீன நுகர்வுப் பண்பாடு செலுத்தியுள்ள செல்வாக்குகள் என்பவற்றைத் தனது வாழ்நாளில் நிறையவே அனுபவித்து அதனூடாகப் பயணித்துப் பட்டறிவு பெற்றுத் தனக்கான, தனது கலையடையாளத்திற்கான கருத்து நிலையை உருவாக்கிக்கொண்ட ஓர் ஆளுமையாக அவர் விளங்கினார், வாழ்ந்தார். தாதாசாகேப் அம்பேத்கார் சிந்தித்ததைப் போல் அடையாளம், அடையாள நீக்கம், அடையாள மறுப்பு, அடையாள மறைப்பு தொடர்பாகத் தெளிவான கருத்துக்களைக் கொண்டிருந்தார். இதற்கு அவருடைய நீண்ட பட்டறிவே காரணம் எனலாம்.

பல்வேறு சவால்கள் நிறைந்த காலங்களில் அத்தகைய சவால்களையெல்லாம் எதிர்கொண்டு ஒரு பறையிசைக் கலைஞனாக வாழ்ந்த அமரர் க.பரசுராமன் அவர்களின் வாழ்வும் இயக்கமும் தமிழர்தம் கலை மரபுகளில் சவால்களை எதிர்கொண்டு ஆக்கபூர்வமாகப் பணியாற்ற முனைவோருக்கான கற்றலுக்குரிய பல்வேறு விடயங்களை உட்கொண்டதாக இருக்கின்றது.

தமிழரின் தொன்மை மிகு கலை வடிவத்தின் முதுசொம் ஒன்றை இழந்து விட்டோம். சென்று வாருங்கள் கலைஞரே...

■

# இலங்கைக்கு நேர்ந்தது பாகிஸ்தானுக்கும்....

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

சீனாவுக்கு அதிகம் கடன்பட்டுள்ளது என்று நிதி நிபுணரும் முன்னாள் சிட்டி வங்கி வங்கியாளருமான யூசுப் நாசர் கூறுகிறார்.

'சிபிஇசி இன் கீழ் பெறப்பட்ட கடனை வெளிநாட்டு நாணய வடிவில் திருப்பிச் செலுத்த வேண்டும். அதேசமயம் இந்தத் திட்டங்களின் வருமானம் பாகிஸ்தான் ரூபாயில் உள்ளது. இது நிச்சயமாக வெளிநாட்டு கடன் திருப்பிச் செலுத்துதலில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது," என்றார் அவர்.

இதேபோல் சீனாவின் வணிகவங்கியின் கடன் வட்டி விகிதத்தைப் பார்த்தால், உலக வங்கி மற்றும் ஐஎம்எப் ஆகியவற்றின் கடனை விட இதன் வட்டி மிகவும் அதிகம். பாகிஸ்தான் போன்ற ஒரு நாட்டிற்கு, பில்லியன் டாலர்களில் அரைசத விகிதம் கூடுதல் வட்டி கூட பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும் என்றும் யூசுப் கூறினார்.

**இந்த பொருளாதார நெருக்கடியில் சீனா என்ன உதவி செய்ய முடியும்?**

பாகிஸ்தானின் நிலுவையில் உள்ள கடனில் சீனக் கடனின் விகிதம் கடந்த ஏழு முதல் எட்டு ஆண்டுகளில் அதிகரித்துள்ளது. இந்த வகையில் பாகிஸ்தான் மற்ற எந்த நாட்டையும் விட சீனாவுக்கு அதிகம் கடன்பட்டுள்ளது.

இந்தக் கடன்களை ரோல் ஓவர் செய்யும் வசதி பாகிஸ்தானுக்கு மிகவும் அவசியமானது. இந்த ரோல் ஓவர்கள் நிகழ்கின்றன என்றும், திருப்பிச் செலுத்தும் காலம் முடிந்துவிட்டால் ரோல் ஓவர் செய்யப்படவேண்டும் என்று இருதரப்பினரும் புரிந்துகொள்வதால் இது தொடர்ந்து நடக்கிறது என்றும் அம்மார் ஹபீப் கூறினார்.

சீன கடன்களை ரோல் ஓவர் செய்ய வேண்டும். மறுசீரமைப்பு செய்யக்கூடாது. மறுசீரமைப்பில் புதிய நிபந்தனைகள் நிர்ணயம் செய்யப்படுகின்றன. ஆனால் ரோல் ஓவரில் இது நடக்காது என்று இது தொடர்பாக அம்ரின் சொரானி குறிப்பிட்டார்.

சீனாவின் வங்கியிடமிருந்து பாகிஸ் தானுக்கு 70 கோடி டாலர் கடனுக்கு ஒப் புதல் கிடைத்திருப்பது இதற்கு ஒரு எடுத் துக்காட்டு என்று அவர் கூறினார்.

இது ஒரு வகையான ரோல் ஓவர். ஏனென்றால் பாகிஸ்தான் சில காலத்திற்கு முன்பு திருப்பிச் செலுத்திய அதே கடன் ரோல் ஓவராக மீண்டும் வழங்கப்பட்டுள்ளது என்றார் அவர்.

'பரஸ்பர கடன்களில் கடன் திருப்பிச் செலுத்தல் காலம் மாற்றி அமைக்கப்படுகிறது. ஆனால் சர்வதேச நிதி நிறுவனங்கள் இதை செய்வதில்லை," என்று டாக்டர் பாஷா குறிப்பிட்டார்.

பாகிஸ்தான் ஏற்கனவே பாரிஸ் கிளப்பில் இருந்து கடன்களை ரீஷெட்யூல் செய்துள்ளது. அதை மீண்டும் செய்வது பொருத்தமானதாக இருக்காது. ஆனால் சீனாவின் இந்த வசதி பாகிஸ்தானுக்கு பயனுள்ளதாக இருக்கும் என்றும் அவர் கூறினார்.

'பாகிஸ்தான் அதிகமாக சீனாவுக்குத் தான் கடனை திருப்பிச் செலுத்த வேண் டும். எனவே உண்மையில் சீனா இந்த விஷயத்தில் அதிக அளவில் உதவ முடியும். கடன்களை மறுசீரமைப்பதற்காக சீனாவும், சர்வதேச நிதி அமைப்புகளும் சந்தித்து பேசவேண்டும். ஆனால் இது வரை சீனாவிடமிருந்து அத்தகைய சமிக்ஞை கிடைக்கவில்லை," என்று இது தொடர்பாக யூசுப் நாசர் குறிப்பிட்டார்.

'சீனாவின் கடன் இந்த நேரத்தில் மிக அதிகமாக உள்ளது. இருப்பினும் பாகிஸ்தானின் கடன் மறுசீரமைப்பு, உலக வங்கி மற்றும் ஐஎம்.எவ் உதவியுடன் செய்யப்படலாம். ஏனெனில் கடன் வழங்கும் நாடுகள் அல்லது அமைப்புகள் ஒன்றிணைந்து செயல்படுவது புதிய விஷயம் அல்ல. முன்பு பாரிஸ் கிளப் உறுப்பினர்களும் ஒன்று சேர்ந்து இதைச் செய்தனர்," என்று அவர் மேலும் கூறினார்..

**இலங்கை நிலை பாகிஸ்தானுக்கும் வருமா?**

தற்போது மோசமான நிலைமையில் பாகிஸ்தான் இருப்பதாகக் கூறும் சர்வதேச விவகாரங்களில் நிபுணத்துவம் பெற்ற பேராசிரியர் ராமு மணிவண்ணன், சீனாவிடம் கடன் வாங்குவதைத் தவிர பாகிஸ்தானுக்கு வேறு வழியில்லை என்கிறார்.

'கடனுக்கான வட்டியும் வட்டிக்கான வட்டியும் செலுத்த வேண்டிய சூழலில் தான் பாகிஸ்தான் பொருளாதாரம் இன்றைக்கு உள்ளது. மேற்கத்திய நாடுகளிடமோ அல்லது ஐஎம்எஃப்பிடம் கடன் கேட்டு சென்றால் அவர்கள் அமைப்பு மாற்றம், அரசியல் நிபந்தனைகள், வங்கி முறையில் மாற்றம் என சில கடுமையான வழிமுறைகளை முன்வைப்பார்கள். அதை ஏற்கும் நிலையில் பாகிஸ்தானின் பொருளாதாரமோ அரசியல் சூழலோ இல்லை. எனவே சீனாவிடம் கடன் வாங்குவது நமக்கு அனுகூலமாக இருக்காது என்றும் அவர்களுக்குத் தெரியும்.

இந்த 700மில்லியன் அமெரிக்க டாலர் கடனுக்கு என்னென்ன நிபந்தனைகளை சீனா முன்வைக்கிறது என்ற விவரங்கள் வெளியான பிறகுதான் இதன் தாக்கம் என்னவாக இருக்கும் என்பது நமக்குத் தெரியும்," என்கிறார் பேராசிரியர் ராமு மணிவண்ணன்.

தொடர்ந்து பேசிய அவர், 'இலங்கை இந்த நிலையைச் சந்தித்ததற்கு சீனாவிடம் பெற்ற கடனும் முக்கிய காரணம். அதோடு, வார் எக்கானமி எனப்படும் போர் பொருளாதாரமும் முக்கிய காரணமாக அமைந்துவிட்டது. பாகிஸ்தானும் அதே காரணம் பொருந்தும். ஏனெனில், பொருளாதாரத்தில் எந்தெந்த விஷயங்க ளுக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் என்பதில் பாகிஸ்தானிடம் தெளிவு இல்லை. ராணுவ மேற்பார்வையில் அரசு நடைபெறும் போது ராணுவத்திற்கு ஈடு கொடுக்கும் வகையில்தான் அந்த நாட் டின் பொருளாதாரம் இருக்கும்," என்றார்.

(பிபிசி)

# மின்சார கட்டண அதிகரிப்பால் அரிசி ஆலைகள் கடும் பாதிப்பு

## அரிசி ஆலை உரிமையாளர் விசனம்

கிளிநொச்சி, மார்ச் 03

மின்சார கட்டண அதிகரிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அரிசி ஆலைகளை முன்னெடுக்க பெரும் சிரமத்தை எதிர்கொள்வதாக அரிசி ஆலை உரிமையாளரொருவர் விசனம் தெரிவித்தார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

மின்சாரத்தில் 90 வீதமான இயந்திரங்கள் இயங்கி வருகின்ற நிலையில் மின் கட்டண அதிகரிப்பு எமக்கு பாரிய சவாலாக உள்ளது.

இது தொடர்பிலான வசதிகளை சம்பந்தப்பட்டவர்கள் செய்து தந்தால் நாங்கள் அரிசி ஆலைகளை திறம்பட செய்யக்கூடியதாக இருக்கும்.

இந்நிலையில் நவீன கால அடிப்படையில் எல்லா இயந்திரங்களும் மின்சாரத்தினால் இயங்கும் பட்சத்தில், மின் கட்டணம் அதிகரிக்குமானால் பாரிய இன்னல்களுக்கு முகங்கொடுக்க நேரிடும்-என்றார். (அ)

# பணத்தை திருப்பிக் கொடுக்க சம்மதம் தெரிவித்தார் திலினி!

கொழும்பு, மார்ச் 03

சர்ச்சைக்குரிய வர்த்தகப் பெண்மணி திலினி பிரியமாலி 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்தியதாக தாக்கல் செய்யப்பட்ட வழக்கு கொழும்பு மேல் நீதிமன்றத்தால் ஜூன் 5ஆம் திகதி விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்த வழக்கு கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி ஆதித்ய படபெந்திகே முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அந்தத் தொகையை செலுத்தி வழக்கைத் தீர்த்துக்கொள்ள முடியும் என்று திலினி பிரியமாலி தரப்பினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர்.

எவ்வாறாயினும், கடந்த திங்கட்கிழமை பணம் செலுத்தப்படும் என்று கூறப்பட்ட போதிலும், அது அவ்வாறு செலுத்தப்படவில்லை. எனவே வழக்கின் விசாரணைக்கு ஒரு திகதியை நிர்ணயிக்கவேண்டும் என்று பாதிக்கப்பட்ட தரப்பு சார்பில் ஆஜரான சட்டத்தரணி சுட்டிக்காட்டினார்.

உண்மைகளை பரிசீலித்த கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி, வழக்கை ஜூன் 5 மற்றும் 7 ஆம் திகதிகளில் விசாரணைக்கு ஒத்திவைத்ததுடன், சமரசம் ஏற்பட்டால் அன்றைய தினம் நீதிமன்றத்துக்கு அறிவிக்குமாறு இரு தரப்பினருக்கும் உத்தரவிட்டார்.

2013ஆம் ஆண்டு மாத்தறை பிரதேசத்தைச் சேர்ந்த சமித் அனுருத்த என்ற நபரிடம் வாகனம் பெற்றுக் கொண்டு 8 மில்லியன் ரூபாவை முறைகேடாகப் பயன்படுத்திய வர்த்தகப் பெண் திலினி பிரியமாலிக்கு எதிராக சட்டமா அதிபர் குற்றப்பத்திரம் தாக்கல் செய்திருந்தார். (அ)

# விற்பனை நிலையம் தீக்கிரை!



மட்டக்களப்பு, மார்ச் 03

மட்டக்களப்பு ஏறாவூர் பிரதான வீதியில் அமைந்துள்ள விற்பனை நிலையத்தில், நேற்று முன் தினம் காலை பரவிய தீயினால், கடையிலிருந்த பொருட்கள் எரிந்து நாசமாகின.

தீ விபத்து தொடர்பில் மட்டக்களப்பு மாநகர சபையின் தீயணைப்புப் பிரிவுக்கு வழங்கப்பட்ட தகவலுக்கு அமைய, விரைந்து வந்த தீயணைப்புப் பிரிவினர் பொதுமக்களின் உதவியுடன் தீயைக் கட்டுப் பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

மின் ஒழுக்குக் காரணமாக தீ விபத்து ஏற்பட்டிருக்கலாம் என சந்தேகிக்கப்படும் நிலையில், ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# துப்பாக்கி, தோட்டா திருட்டு; விமானப்படை சிப்பாய் கைது

கொழும்பு, மார்ச் 03

இலங்கை விமானப் படைக்கு சொந்தமான துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் திருடப்பட்டமை தொடர்பில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் விமானப்படைச் சிப்பாய் ஒருவரும் அடங்குவதாக பொலிஸார் கூறினர்.

கடந்த நவம்பர் மாதம் 4 ஆம் திகதி வான்படை முகாமில் பாதுகாப்புக் கடமையில் இருந்த சிப்பாய் ஒருவரின் ரி-56 ரக துப்பாக்கி மற்றும் தோட்டாக்கள் என்பன காணாமல் போனதாக முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

இதனையடுத்து, முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளுக்கமைய, இருவர் கைதாகினர் என பொலிஸ் ஊடகப் பேச்சாளர் காரியாலயம் தெரிவித்துள்ளது. (அ)

கல்வி tv CHANNEL-1

**03.03.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | விஞ்ஞானம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | தமிழ் |
| 07.30 | தரம்-09 | வரலாறு |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | English |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | விஞ்ஞானம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | சங்கீதம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | வரலாறு |
| 05.00 | A/Lவினாத்தாள் | சைவசமயம் கலைப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறுஒளிபரப்பு |
| | மறு ஒளிபரப்பு | மறு ஒளிபரப்பு |
| | | அனைத்துப்பாடங்களும் |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | புவியியல் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | வணிகக்கல்வி |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | பௌதீகவியல் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | விஞ்ஞானம் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சங்கீதம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | வரலாறு |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | சைவசமயம் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி tv CHANNEL - 2

**03.03.2023**
**வெள்ளிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 08.15 | தரம்-01 | கதை |
| 09.00 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 09.45 | தரம்-03 | சைவசமயம் |
| 10.30 | தரம்-03 | அழகியல் |
| 11.15 | தரம்-04 | சைவசமயம் |
| 12.30 | தரம்-04 | கணிதம் - paper |
| 01.15 | தரம்-05 | சைவசமயம் |
| 02.00 | தரம்-05 | Gentral knowledge |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | ஆரம்பநிலை பாடங்கள் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | சுற்றாடற்கல்வி |
| 06.00 | தரம்-03 | சைவசமயம் |
| 06.45 | தரம்-03 | அழகியல் |
| 07.30 | தரம்-04 | சைவசமயம் |
| 08.15 | தரம்-04 | கணிதம் - paper |
| 09.00 | தரம்-05 | சைவசமயம் |
| 09.45 | தரம்-05 | Gentral knowledge |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | சைவசமயம் |
| 12.30 | தரம்-03 | அழகியல் |
| 01.15 | தரம்-04 | சைவசமயம் |
| 02.00 | தரம்-04 | கணிதம் - paper |
| 02.45 | தரம்-05 | சைவசமயம் |
| 03.30 | தரம்-05 | Gentral knowledge |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

## மோட்டார் சைக்கிளில் சென்ற இளைஞன் நீர் நிரம்பிய குழியில் விழுந்து உயிரிழப்பு!

மட்டக்களப்பு, மார்ச் 03

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அம்பிளாந்துறை வில்லுக்குளம் வீதியில் உள்ள நீர் நிரம்பிய குழியில் வீழ்ந்ததில் இளைஞர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்துள்ளார்.

இச் சம்பவம் கடந்த செவ்வாய்கிழமை மாலை இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஆர்.கே.எம்.பாடசாலை வீதி கல்முனை பிரதே சத்தைச் சேர்ந்த ரீ.கவிசாந் என்பவரே இவ்விபத்தில் பலியானவராவார்.

அம்பிளாந்துறை வில்லுக்குளம் வீதியூடாக உயிரிழந்த இளைஞன் மோட்டார் சைக்கிளில் பயணித்துக்கொண்டிருந்த போது, குறித்த வீதியில் காணப்பட்ட நீர் நிரம்பிய குழியில் விழுந்துள்ளார்.

குழியில் விழுந்த இளைஞன் காப்பாற்றப்பட்டு மகிழடித்தீவு வைத்தியசாலையில் அனுமதிக்கப் பட்ட நிலையில் அங்கு சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

மட்டக்களப்பு நீதிமன்ற நீதிவான் பீற்றர் போலின் உத்தரவிற்கமைய சம்பவ இடத்துக்கு சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் சடலத்தை பார்வையிட்டதுடன் சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்துமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

(அ)

## மட்டக்களப்பில் 41 மாணவர்களுக்கு யாழ். இந்து பழைய மாணவர் உதவி

### சைக்கிள்கள் நேற்றுமுன்தினம் வழங்கப்பட்டன

மட்டக்களப்பு, மார்ச் 03

**கனடா கல்வி அமைப்பின் ஏற்பாட்டில், மட்டக்களப்பு மாவட்ட அறம் அமைப்பின் ஒத்துழைப்புடன், யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் 1982ஆம் ஆண்டு உயர் தரப் பிரிவு மாணவர்களின் நிதிப் பங்களிப்பில் மட்டக்களப்பு மாவட்ட மாணவர்களுக்கான 41 சைக்கிள்கள் மட்டக்களப்பில் வைத்து நேற்று முன்தினம் வழங்கப்பட்டன.**



கனடா கல்வி அமைப்பின் கிழக்கு மாகாண கல்வி மேம்பாட்டுக்கான இணைப்பாளர் சிரேஷ்ட இலங்கை நிர்வாக சேவை அதிகாரி மா.தயாபரன் தலைமையில், மட்டக்களப்பு மகாஜன கல்லூரியில் இந்நிகழ்வு நடைபெற்றது.

வறுமைக்கோட்டில் வாழும் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு சைக்கிள்கள் இதன்போது வழங்கப்பட்டதுடன், கிழக்கு மாகாணத்தில் உள்ள மாணவர்களுக்கு 75 சைக்கிள்கள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், யாழ். இந்துக் கல்லூரியின் 1982ஆம் ஆண்டு உயர் தர பழைய மாணவர்கள், பாடசாலை அதிபர்கள் மற்றும் பெற்றோர் எனப் பலர் கலந்துகொண்டனர்.

(அ)

## ‘லிப்ட்’ நிறுவனத்தின் ஏற்பாட்டில் மாணவர்களுக்குச் செயலமர்வு

மட்டக்களப்பு, மார்ச் 03

“கருத்து வெளிப்பாட்டு உரிமையும் நெறிமுறைகளுடன் கூடிய ஊடகப்பாவனையும்” எனும் தலைப்பில் பாடசாலை மாணவர்களுக்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் லிப்ட் மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பில் இயங்கிவரும் லிப்ட் எனும் மனிதாபிமானத் தொண்டு நிறுவனத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மாவட்ட ஊடகப் பிரிவு, மனித நேயத் தகவல் குறிப்புகள் நிறுவனம் ஆகியவற்றின் ஆதரவுடன் இந்த விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

ஹெல்விட்டஸ் நிறுவனத்தின் நிதி அனுசரணையில் லிப்ட் நிறுவனத்தினால் அமுல்படுத்தப்படும் “ஊடக தர்மத்தை வலுப்படுத்தலும், வன்முறைத் தீவிரவாதத்தை தடுத்தலும்” எனும் வேலைத்திட்டத்தின் ஒரு அங்கமாக இது நடத்தப்படுகிறது.



மாணவர்கள் மத்தியில் சமூக ஊடகப் பாவனை மற்றும் இலத்திரனியல் ஊடகங்களினூடாக கருத்து வெளியிடும் ஆர்வம் அதிகரித்துக் காணப்படும் இக்காலகட்டத்தில் அவர்களுக்கு ஊடக தர்மம், ஊடகம் தொடர்பான சட்டங்கள், வரையறைகள் போன்றவற்றில் விழிப்புணர்வை ஏற்படுத்தி அவர்களை சரியான பாதையில் ஊக்குவிப்பதே இதன் நோக்கமாகும்.

மட்டக்களப்பு புனித மிக்கேல் தேசிய பாடசாலை, புனித சிசிலியா தேசிய மகளிர் பாடசாலை, இந்துக் கல்லூரி, காத்தான்குடி மத்திய கல்லூரி, காத்தான்குடி அல் ஹிரா மகா வித்தியாலயம் ஆகியவற்றில் நேற்றுமுன் தினம் சமகாலத்தில் ஆரம்பிக்கப்பட்ட இவ் விழிப்புணர்வுக் கருத்தரங்கில் தலா 30 மாணவர்கள் வீதம் 150 மாணவர்கள் பயனடையவுள்ளனர்.

அனைத்து பாடசாலைகளிலும் இரண்டு நாட் கருத்தரங்கு இடம்பெறவுள்ளதுடன், இவ்வாறான 30 கருத்தரங்குகள் ஏனைய பாடசாலைகளிலும் நடத்தப்படவுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(அ)

## மாவட்ட நீதிமன்ற ஆவணங்களுக்குத் தீ 3 சந்தேக நபர்கள் மீண்டும் மறியலில்

அம்பாறை, மார்ச் 03

அக்கரைப்பற்று மாவட்ட நீதிமன்ற ஆவணக் காப்பகத்தை தீயிட்டு எரித்த குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 03 சந்தேக நபர்களையும் மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் தெசீபா ரஜீவன் உத்தரவிட்டார்.

கடந்த வருடம் டிசெம்பர் மாதம் 21 ஆம் திகதி புதன்கிழமை அதிகாலைவேளையில் நீதிமன்றக் கட்டடத் தொகுதிக்கு வைக்கப்பட்ட தீயினால் நீதிமன்றின் வழக்கு பதிவேட்டு அறை மற்றும் திறந்த நீதிமன்றம் போன்ற பல பிரிவுகளிலுள்ள ஆவணக் கோப்புகள் முற்றாக எரிந்துள்ளன.

இது தொடர்பாக பொலிஸார் மேற்கொண்ட விசாரணையின்போது, நீதிமன்றத்துக்கு அருகிலுள்ள வீடுகளில் பொருத்தப்பட்டிருந்த சிசிரிவி கமெரா பதிவுகளில் 03 நபர்கள் முகத்தை மூடியவாறு நீதிமன்ற வளாகத்தில் உள் நுழைந்து கட்டத்துக்கு தீ வைத்துவிட்டு, தப்பியோடும் காட்சி பதிவாகியிருந்தது.

இது தொடர்பாக விசாரணையை மேற்கொள்வதற்கு விசேட பொலிஸ் குழு நியமிக்கப்பட்டு, விசாரணை மேற்கொண்டு வந்த நிலையில், சந்தேகத்தின் பேரில் அக்கரைப்பற்று கோளாவில் பிரதேசத்தைச் சேர்ந்த 28, 24 மற்றும் 19 வயதுடைய 03 சந்தேகநபர்கள் கல்முனை மற்றும் பெரியநீலாவனை பிரதேசத்தில் மறைந்திருந்த வேளையில் கைது செய்யப்பட்டு, விளக்கமறியலில் வைக்கப்பட்டனர்.

இவ் வழக்கு கடந்த 28 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட போது, அக்கரைப்பற்று நீதவான் நீதிமன்ற மேலதிக நீதவான் தெசீபா ரஜீவன், சந்தேக நபர்களை மீண்டும் எதிர்வரும் 14ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

(அ)

## தேசிய மல்யுத்த போட்டியில் மட்டக்களப்பு அணி முதலிடம்



மட்டக்களப்பு, மார்ச் 03

இலங்கை சிறைச்சாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற மல்யுத்த போட்டியில் தேசிய ரிதியில் மட்டக்களப்பு அணி முதல் இடம் பெற்று சாதனை படைத்துள்ளது.

அகில இலங்கை சிறைச்சாலைகளுக்கு இடையில் இடம்பெற்ற மல்யுத்த போட்டி கடந்த 25 ஆம் திகதி பொலநறுவை றோயல் கல்லூரியில் இடம்பெற்றது.

இப் போட்டியில் மட்டக்களப்பு சிறைச்சாலையைச் சேர்ந்த அணி கலந்து கொண்டு 9 தங்கம், 1 வெள்ளி மற்றும் 4 வெண்கலப் பதக்கங்களை பெற்று அகில இலங்கை சிறைச்சாலைகளுக்குள் முதல் இடத்தை பெற்றுக்கொண்டது.

இப் போட்டியில் காரைதீவு மண்ணைச் சேர்ந்த இரு இளம் வீரர்கள் தங்கம் மற்றும் வெள்ளிப் பதக்கங்கள் பெற்று சாதனை படைத்துள்ளனர்.

காரைதீவைச்சேர்ந்த அ.பிறேமகாந்தன் 97-125கிலோ எடை கொண்ட போட்டியில் கலந்து கொண்டு தங்க பதக்கமும் மற்றும் அஜித் 64-71கிலோ எடை கொண்ட போட்டியில் கலந்து கொண்டு வெண்கலப் பதக்கமும் பெற்றுக்கொண்டனர். (அ)

## சாதனை மாணவர்களுக்கு ஓந்தாச்சிமடத்தில் உதவி!

அம்பாறை, மார்ச் 03

அவுஸ்திரேலியாவில் வாழும் ஓந்தாச்சிமடம் பழைய மாணவர்களால் ஓந்தாச்சிமடம் விநாயகர் மகா வித்தியாலயத்தில் சாதனை படைத்த மாணவர்களுக்கு பல பெறுமதியான கற்றல் உபகரணங்கள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை காலை ஆராதனையில் வழங்கப்பட்டன.

பாடசாலை அதிபர் திருமதி மதிவதனி பிரபாகரன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக சம்மாந்துறை வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் வி.ரி. சகாதேவராஜா கலந்து சிறப்பித்தார்.

நன்கொடை அதிதியாக நன்கொடையாளர் சார்பாக அவுஸ்திரேலியாவில் இருந்து வருகை தந்த பிரபல சமூக சேவையாளர் கோபாலபிள்ளை ஜனபாலச்சந்திரன்( பாலன்) கலந்து சிறப்பித்தார்.

கௌரவ அதிதிகளாக பாடசாலையின் முன்னாள் பிரதி அதிபர் திருமதி அ.சற்குணராஜா, மற்றும் ஆசிரியர் முத்தையா ஜெயாதி ஆகியோர் கலந்து சிறப்பித்தார்கள்.

கடந்த வருட கபொத. சாதாரண பரிட்சையில் சாதனை படைத்த 40 மாணவர்களுக்கும், தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவருக்கும் பெறுமதியான கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

(அ)

## மின்னல் தாக்கி வீடு சேதம்

அம்பாறை, மார்ச் 03

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் கடந்த 28ஆம் திகதி இடி, மின்னலுடன் கூடிய பலத்த மழை பெய்தது.

இதன்போது ஏற்பட்ட மின்னல் தாக்கத்தால் அக்கரைப்பற்று ஆறாம் பிரிவு மத்திய கல்லூரி வீதியில் உள்ள சில வீடுகளில் பலத்த தேசங்கள் ஏற்பட்டுள்ளதாக குடியிருப்பாளர்கள் தெரிவித்தனர்.

தென்னை மரமொன்றை தாக்கிய மின்னல் காரணமாக தென்னை மரத்தில் தீப்பிடித்ததாகவும் அதனைத் தொடர்ந்து மரத்தின் கீழிருந்த வீட்டையும் மின்னல் தாக்கியதாகவும் சம்பவத்தை நேரில் பார்த்த பொதுமக்கள் தெரிவித்தனர்.

அதன் மூலம் தான் தெய்வாதீனமாக உயிர் தப்பினார் என குடும்பத் தலைவர் தெரிவித்தார்.

இச்சந்தர்ப்பத்தில் தாம் கட்டிலில் உறங்கிக் கொண்டிருந்த போது, கூரையின் பாகங்கள் தான் படுத்துறங்கிய கட்டிலில் பலமாக வீழ்ந்ததாகவும் அதன் மூலம் சிறு காயங்களுடன் தான் உயிர்தப்பினார் எனவும் அவர் கூறினார்.

(அ)

# நைஜீரியா ஜனாதிபதியாக போலா டினுபு தெரிவானார்



அபுஜா, மார்ச் 03

நைஜீரியாவின் ஜனாதிபதி தேர்தலில், லாகோஸ் மாகாண முன்னாள் ஆளுநர் போலா டினுபு வெற்றி பெற்றதாக நைஜீரியாவின் சுதந்திர தேசிய தேர்தல் ஆணையம் அறிவித்துள்ளது.

கடந்த 25ஆம் திகதி நடைபெற்ற எதிர்பார்ப்பு மிக்க ஜனாதிபதி தேர்தலில், 36.61 சதவீத வாக்குகளைப் பெற்ற ஆளும் கட்சியைச் சேர்ந்த வேட்பாளரான டினுபு வெற்றி பெற்றார்.

1999இல் நாடு ஜனநாயக ஆட்சிக்கு திரும்பியதில் இருந்து நைஜீரியாவின் ஐந்தாவது ஜனாதிபதியாக டினுபு பதவியேற்கவுள்ளார்.

மிகக் கடுமையான போட்டி நிலவிய இந்தத் தேர்தலில் போலாவுடன் அடிகு அபுபக்கர், பீட்டர் ஒபி, ரபிபு வாங்வாசோ ஆகியோர் போட்டியிட்டனர். இவர்கள் 25 மாகாணங்களில் அதிக வாக்குகளை பெற்றனர்.

71 வயதாகும் டினுபு, 1999 மற்றும் 2007க்கு இடையில் லாகோஸில் ஆளுநராக இருந்தார், அங்கு அவர் தற்போது நைஜீரியாவின் பொருளாதார மையமாக இருக்கும் மாநிலத்தின் மாற்றத்திற்கு வழிவகுத்த முன்னோடி சீர்திருத்தங்களுக்கு பெருமை சேர்த்துள்ளார். (அ)

# பேரிடருக்கு மத்தியிலும் திட்டமிட்டவாறு தேர்தல்!

## மே 14 நடக்கும் என்கிறார் துருக்கி அதிபர்



**அங்காரா, மார்ச் 03**

**துருக்கியில் ஜனாதிபதி தேர்தலும் பாராளுமன்ற தேர்தலும் திட்டமிட்டவாறு எதிர்வரும் மே 14 ஆம் திகதி நடைபெறும் என அந்த நாட்டின் அதிபர் எர்டோகன் அறிவித்துள்ளார்.**

துருக்கியில் அண்மையில் ஏற்பட்ட நிலநடுக்கங்களால் சுமார் 50,000 பேர் வரையில் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கு தேர்தலுக்கான ஆயத்தங்களை செய்வதில் தேர்தல்கள் ஆணைக்குழு சிக்கல்களை எதிர்கொள்ளக்கூடும் என அஞ்சப்படும் நிலையில், எர்டோகன் இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளார்.

'கடவுளின் விருப்பம் இருந்தால், இந்த நாடு மே 14 ஆம் திகதி தேவையானதை செய்யும்,' என பாராளுமன்றத்தில் அவர் தெரிவித்ததாக துருக்கி ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.


நிலநடுக்கத்துக்கு முன்னதாக அவரின் தனிப்பட்ட புகழ் குறைந்தமை மற்றும் பேரிடர் நிலையின்போது அரசாங்கம் அதனை கையாண்ட விதம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளமையையும் பொருட்படுத்தாது அவர் இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

தேர்தல்கள் ஜூன் 18 ஆம் திகதிக்கு திட்டமிடப்பட்டிருந்த போதும், ஜனாதிபதி எர்டோகன் அதனை மே 14 ஆம் திகதி முன்கூட்டியே நடத்தவுள்ளதாக சில மாதங்களுக்கு முன்னர் அறிவித்திருந்தார்.

ஜனாதிபதி எர்டோகன் 2014 இல் முதன்முதலில் ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2018 இல் மீண்டும் ஜனாதிபதியானார். (அ)

# எல்லைகளில் பாதுகாப்பை பலப்படுத்த புடின் உத்தரவு!

## 'ட்ரோன்' தாக்குதலையடுத்து



மொஸ்கோ, மார்ச் 03

'டிரோன்' தாக்குதல்களுக்கு பிறகு உக்ரைனுடன் பகிர்ந்து கொள்ளப்படும் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை பலப்படுத்துமாறு அதிபர் புடின் உத்தரவிட்டுள்ளார்.

உக்ரைன் மீதான ரஷ்யா போர் ஓர் ஆண்டை கடந்தும் தீவிரமாக நடந்து வருகிறது. இதனிடையே உக்ரைன் எல்லையில் அமைந்துள்ள ரஷ்ய பகுதிகளில் அவ்வப்போது 'டிரோன்' தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில் உக்ரைனின் எல்லையோரம் உள்ள ரஷ்யாவின் தெற்கு மற்றும் மேற்கு பகுதிகளில் கடந்த இரு தினங்களாக அடுத்தடுத்து 'டிரோன்' தாக்குதல் நடத்தப்பட்ட சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. கடந்த திங்கட்கிழமை இரவு ரஷ்யாவின் மேற்கு பெல்கொரோட் பிராந்தியத்துக்குள் 3 ட்ரோன்கள் நுழைந்து தாக்குதல் நடத்தியதாகவும், இதில் கார்கள் மற்றும் கட்டடங்களுக்கு சிறிய அளவில் சேதம் ஏற்பட்டதாகவும் பிராந்திய ஆளுநர் வியசெஸ்லாவ் கிளாட்கோவ் தெரிவித்தார்.

அதனை தொடர்ந்து கடந்த செவ்வாய் காலை பிரியான்ஸ்க் பிராந்தியத்தில் உக்ரைன் ட்ரோனை ரஷிய படையினர் சுட்டு வீழ்த்தியதாக அதன் ஆளுநர் அலெக்சாண்டர் போகோமாஸ் தெரிவித்தார்.

அதேபோல் கிரஸ்னொடார், அடிகியா பிராந்தியங்களிலும் 2 டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டதாக தெரிவிக்கப்பட்டது. இதனிடையே ரஷ்யா தலைநகர் மொஸ்கோவில் இருந்து 100 கி.மீ. தொலைவில் உள்ள குபஸ்டோவோ கிராமத்தில் வனப்பகுதிக்கு அருகில் ட்ரோன் ஒன்று விழுந்து நொறுங்கியது. எனினும் இதில் யாருக்கும் எந்த பாதிப்பும் ஏற்படவில்லை என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்தத் தாக்குதலை உக்ரைன் நடத்தியதாக ரஷ்யா குற்றஞ்சாட்டினாலும், அதற்கு உக்ரைன் உடனடியாக எந்த பதிலும் தெரிவிக்கவில்லை. அடுத்தடுத்து நடத்தப்பட்ட 'ட்ரோன்' தாக்குதல்களுக்கு பிறகு உக்ரைனுடன் பகிர்ந்து கொள்ளப்படும் எல்லைப் பகுதிகளில் பாதுகாப்பை வலுப்படுத்துமாறு அதிபர் புடின் உத்தரவிட்டுள்ளார். (அ)

# 90 நாள்களுள் பாகிஸ்தானில் தேர்தலை நடத்தவேண்டும்!

## உயர் நீதிமன்றம் அதிரடி அறிவிப்பு

இஸ்லாமாபாத், மார்ச் 03

அரசாங்கம் நிதி இல்லை என்று கூறியபோதிலும் இரு மாகாணங்களில் 90 நாட்களுக்குள் தேர்தலை நடத்த பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

நிதி அமைச்சு தேர்தலுக்கு நிதி வழங்காத நிலையிலும் தேர்தலுக்கான அறிவிப்பை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிடாத சூழலிலும் ஜனாதிபதி ஒருதலைப்பட்சமாக திகதியை அறிவித்தார்.

இருப்பினும் ஆளும் கட்சி அரசியல்வாதிகள் ஜனாதிபதியின் செயலுக்கு கண்டனம் தெரிவித்ததோடு உள்துறை அமைச்சர், பாதுகாப்பு அமைச்சர் மற்றும் நீதி அமைச்சர்கள் தனித்தனியாக அறிக்கைகளை வெளியிட்டனர்.

இரண்டு மாகாண தேர்தல்களுக்கும் 15 பில்லியன் பாகிஸ்தான் ரூபாய் தேவை என்று பாகிஸ்தான் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

# ரிக்-ரொக்கை தடுக்கும் சட்டமூலத்துக்கு அனுமதி

## அமெரிக்க பாராளுமன்றக் குழு வழங்கியது

நியூயோர்க், மார்ச் 03

சீனாவை தளமாக கொண்டு இயங்கும் ரிக்-ரொக் செயலியை தடை செய்வதற்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடனுக்கு அதிகாரம் வழங்கும் சட்டமூலத்துக்கு அமெரிக்க பாராளுமன்றக் குழு நேற்று முன் தினம் அனுமதி வழங்கியுள்ளது.

நாட்டின் தேசிய பாதுகாப்பை கருதி, கடந்த ஆண்டில் அரச ஊழியர்கள் ரிக்-ரொக் செயலியை பயன்படுத்த அமெரிக்க அரசாங்கம் தடை விதித்தது.

இதனிடையே அமெரிக்காவில் அரசின் மின்னணு சாதனங்களில் ரிக்-ரொக் செயலியை நிரந்தரமாக தடை செய்வது குறித்து பரிசீலிக்கப்பட்டு வந்தது.

இதன்படி அரசின் மின்னணு சாதனங்களில் இருந்து ரிக்-ரொக் செயலியை அகற்றுவதற்கு 30 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டது.

அதற்குள் அரசினால் வழங்கப்பட்டுள்ள அனைத்து மின்னணு சாதனங்களிலும் இந்த செயலியை அகற்ற வேண்டும் என அமெரிக்காவின் வெள்ளை மாளிகை தமது செய்திக்குறிப்பில் தெரிவித்திருந்தது.

இந்தநிலையில், ரிக்-ரொக் செயலியை தடை செய்வதற்கான அதிகாரம் ஜோ பைடனுக்கு வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக ஐரோப்பிய நாடான டென்மார்க்கில் 179 உறுப்பினர்களை கொண்ட பாராளுமன்றம், அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் ஊழியர்கள் தங்களின் கைப்பேசியில் இருந்து ரிக்ரொக் செயலியை நீக்க வேண்டுமென வலியுறுத்தி இருந்தது.

இதேபோல் நாட்டின் பாதுகாப்பு கருதி கனடாவில் அரசால் வழங்கப்படும் கைப்பேசி, கணினி உள்ளிட்ட அனைத்து மின்னணு சாதனங்களிலும் இந்த செயலியை பதிவிறக்கம் செய்ய தடை விதிக்கப்பட்டது.

இதற்கு முன்பே பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வந்தாலும் அதனை நீக்கவேண்டும் என கனடா அரசாங்கம் உத்தரவிட்டிருந்தது.

பல ஐரோப்பிய நாடுகளும் அரச ஊழியர்கள் ரிக்-ரொக் செயலியை பயன்படுத்தவும், அரசின் மின்னணு சாதனங்களில் இந்த செயலியை பதிவிறக்கம் செய்யவும் தடை விதித்து வருவது குறிப்பிடத்தக்கது. (அ)

# பெலாரஸிடன் இணைந்து பணியாற்ற விரும்பும் சீனா



பிஜிங், மார்ச் 03

பெலாரஸிடன் இணைந்து இரு நாடுகளுக்கும் இடையிலான உறவுகளின் ஆரோக்கியமான மற்றும் நிலையான வளர்ச்சியை மிக உயர்ந்த மட்டத்தில் மேம்படுத்துவதற்கு தயாராக சீனாவின் ஜனாதிபதி ஜி ஜின்பிங் தெரிவித்தார் என அந்நாட்டு ஊடகங்கள் தெரிவித்தன.

சீனாவும் பெலாரஸிம் தங்கள் சொந்த நலன்களைப் பாதுகாப்பதில் ஒருவருக்கொருவர் ஆதரவளிக்கவேண்டும், உள் விவகாரங்களில் வெளிப்புற சக்திகளின் தலையீட்டை எதிர்க்கவேண்டும், மேலும் இரு நாடுகளின் இறையாண்மை மற்றும் அரசியல் பாதுகாப்பைப் பாதுகாக்க வேண்டும் என்றும் ஜி கூறினார்.

பெலாரஸ் அதிபர் அலெக்சாண்டர் லுகாஷென்கோ பீஜிங்கில் பல அரசு மட்ட கூட்டங்களில் கலந்துகொண்டார். இரு நாட்டுத் தலைவர்களும் கூட்டறிக்கையில் கையெழுத்திட்டனர். இது அனைத்து சூழ்நிலை மற்றும் நாடுகளுக்கு இடையிலான விரிவான மூலோபாய கூட்டாண்மையை மேலும் மேம்படுத்துவதை உறுதிப்படுத்துகிறது என்று மாநில ஊடகங்கள் தெரிவித்தன.

கடந்த புதன்கிழமை, சீனாவும் பெலாரஸிம் பொருளாதாரம் மற்றும் வர்த்தகம், தொழில், விவசாயம், அறிவியல் மற்றும் தொழில்நுட்பம், சுகாதாரம், சுற்றுலா மற்றும் விளையாட்டு ஆகிய துறைகளில் பல இருதரப்பு ஒத்துழைப்பு ஆவணங்களில் கையெழுத்திட்டதாக சின்ஹவா செய்திகள் தெரிவித்தன. (அ)

# மீண்டும் சுருண்டது இந்தியா; ஆஸிக்கு இலகு வெற்றி இலக்கு

*இந்தூர், மார்ச் 03*

அவுஸ்திரேலியாவுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் போட்டியில் இரண்டாவது இன்னிங்ஸிலும் 163 ஓட்டங்களுக்கு சுருண்டது இந்திய அணி. இதன் மூலம் இந்த டெஸ்ட் போட்டியை வெல்வதற்கு அவுஸ்திரேலியாவுக்கு 76 ஓட்டங்கள் என்ற மிக இலகுவான இலக்கு வைக்கப்பட்டுள்ளது.

போர்டர் - கவாஸ்கர் கிண்ணத்துக்காக இந்திய - அவுஸ்திரேலிய அணிகள் 4 டெஸ்ட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுகின்றன.

முதல் இரு டெஸ்ட் போட்டிகளையும் இந்திய அணி கைப்பற்றி தொடரில் முன்னிலை வகிக்கிறது. இந்த நிலையில், இந்தூரில் மூன்றாவது டெஸ்ட் போட்டி நேற்று முன்தினம் ஆரம்பமானது.

முதல் நாளில் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 109 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. பதிலுக்கு தனது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 156 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்களை இழந்திருந்த நிலையில் முதல் நாள் ஆட்டம் முடிவுக்கு வந்தது.

அப்போது, பீற்றர் ஹான்ட்கோம்ப் 7, கமரூன் கிறீன் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்த னர். நேற்று இரண்டாம் நாளில் இருவரும் துடுப்பெடுத்தாடினர். நிதானமாக ஆடிய



இருவரும் பீற்றர் ஹான்ட்கோம்ப் 19 ஓட்டங்கள், கமரூன் கிறீன் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

இதையடுத்து மளமளவென விக்கெட்கள் வீழ்ந்தன. 41 ஓட்டங்களுக்குள் எஞ்சிய 6 விக்கெட்களையும் இழந்தது அவுஸ்திரேலிய அணி. முதல் இன்னிங்ஸில் 197 ஓட்டங்களை பெற்றது அவுஸ்தி ரேலியா.

நேற்றைய நாளில் வீழ்த்தப்பட்ட 6 விக்கெட்களில் அஸ்வின், உமேஷ் யாதவ் தலா 3 விக்கெட்களை வீழ்த்தினர்.

பதிலுக்கு இரண்டாவது இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடியது இந்திய அணி. புஜாரா மட்டும் நிதானம் காட்டினார்.

ரோஹித் 12, ஷுப்மன் கில் 5, விராட் கோலி 13, ஜடேஜா 7, ஸ்ரேயாஷ் ஐயர் 26, பாரத் 03, அஸ்வின் 16 விக்கெட்களுடன் ஆட்டமிழந்தனர். நிதானமாக நிலைத்து ஆடிய புஜாரா 142 பந்து களில் 59 ஓட்டங்களைப் பெற்றது.

60.3 ஓவர்கள் தாக்குப்பிடித்த அவுஸ்திரேலிய அணி 163 ஓட்டங் களை எடுத்தது.

அவுஸ்திரேலியாவின் பந்துவீச்சில் அபாராமாக பந்துவீசிய நதன் லயன் 8 விக்கெட்களையும் குணெமன், ஸ்ரார்க் ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

அவுஸ்திரேலிய அணி வெற்றி பெறுவதற்கு 76 ஓட்டங்கள் தேவை.

இன்று போட்டியின் மூன்றாம் நாள் ஆட்டமாகும். (ஐ)



# தெ. ஆபிரிக்கா-மேற்கிந்தியா டெஸ்ட் ஒரே நாளில் 16 விக்கெட்கள் வீழ்ச்சி!

*செஞ்சூரியன், மார்ச் 03*

தென்னாபிரிக்கா - மேற்கிந்தியா மோதும் போட்டியில் ஒரேநாளில் 16 விக்கெட்கள் வீழ்த்தப்பட்டன.

தென்னாபிரிக்கா- மேற்கிந்தியத் தீவுகள் அணிகள் இடையிலான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி செஞ்சூரியனில் நடக்கிறது.

முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா தொடக்க நாளில் 8 விக்கெட்கள் இழப்புக்கு 314 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இரண்டாவது நாளான நேற்று முன்தினம் எஞ்சிய இரு விக்கெட்களையும் இழந்து எல்லாமாக 342 ஓட்டங்களைப் பெற்றது.

பின்னர் தனது முதல் இன்னிங்ஸில் ஆடிய மேற்கிந்தியத் தீவுகள் அணி ஒரு கட்டத்தில் 3 விக்கெட்களுக்கு 169 ஓட்டங்களுடன் நல்ல நிலையில் இருந்தது.

ரேய்மான் ரீபெர் (62 ஓட்டங்கள்) வீழ்ந்ததும் மளமளவென விக்கெட்களைப் பறிகொடுத்த மேற்கிந்தியத் தீவுகள் 69 ஓவர்களில் 212 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது.

தென்னாபிரிக்காவின் வேகப்பந்து வீச்சாளர் அன்ரிச் நோர்ட்ஜே 5 விக்கெட்களை வீழ்த்தினார்.

அடுத்து 130 ஓட்டங்கள் முன்னிலையுடன் 2ஆவது இன்னிங்ஸை தொடங்கிய தென்னாபிரிக்க அணி ஆட்ட நேர முடிவில் 4 விக்கெட்கள் வீழ்ச்சிக்கு 49 ஓட்டங்களுடன் தடுமாறியது.

நேற்றுமுன்தினம் மட்டுமே ஒரே நாளில் 16 விக்கெட்கள் சரிந்தது கவனிக்கத்தக்கது. (ஐ)

# பங்களாதேஷுடனான ஒருநாள் போட்; தட்டுத்தடுமாறி வென்றது இங்கிலாந்து!

*மிர்பூர், மார்ச் 03*

பங்களாதேஷுக்கு எதிரான முதல் ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து தடுமாறிய போதும், டேவிட் மலனின் அபார சதத்தின் உதவியால் 3 விக்கெட்களால் வெற்றி பெற்றது.

3 ஒருநாள், மூன்று இருபது - 20 தொடரில் விளையாடுவதற்காக இங்கிலாந்து அணி பங்களாதேஷ் சென்றுள்ளது.

முதல் ஒருநாள் போட்டி நேற்று முன்தினம் மிர்பூரில் பகல் - இரவு போட்டியாக நடந்தது.

நாணயச் சுழற்சியில் வென்று முதலில் துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி 47.2 ஓவர்களில் 209 ஓட்டங்களில் சகல விக்கெட்களையும் இழந்தது.

அதிகபட்சமாக நஜ்முல் ஹூசைன் ஷன்டோ 58 ஓட்டங்களும் மக்முதுல்லா 31 ஓட்டங்களும் அணித் தலைவர்



தமீம் இக்பால் 23 ஓட்டங்களும் எடுத்தனர்.

இங்கிலாந்து தரப்பில் ஜோப்ரா ஆர்ச்சர், மார்க்வவூட், மொயீன் அலி, அடில் ரஷித் தலா 2 விக்கெட்களை வீழ்த்தினர்.

210 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் ஆடிய இங்கிலாந்து அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சி காத்து இருந்தது. 65 ஓட்டங்களுக்குள் 4 விக்கெட்கள் இழந்து தடுமாறிய இங்கிலாந்து அணியை, பொறுப்புடன் ஆடிய டேவிட் மலன் வெற்றியை நோக்கி பயணிக்க வைத்தார்.

அந்த அணி 161 ஓட்டங்களுக்குள் 7 விக்கெட்களை இழந்தாலும் கடைசி வரை நின்று போராடிய டேவிட் மலன் பௌண்ட்ரி விளாசி இலக்கை கடக்க வைத்தார். இங்கிலாந்து அணி 48.4 ஓவர்களில் 7 விக்கெட்கள் இழப்புக்கு 212 ஓட்டங்கள் எடுத்து 3 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

நான்காவது சதத்தை எட்டிய டேவிட் மலன் 114 ஓட்டங்களுடனும் (145 பந்துகள், 8 பௌண்ட்ரிகள், 4 சிக்ஸர்), அடில் ரஷித் 17 ஓட்டங்களுடனும் களத்தில் இருந்தனர். (ஐ)

# 500 விக்கெட்கள் 5000 ஓட்டங்கள்

## ரவீந்திர ஜடேஜா புதிய மைல்கல்



*இந்தூர், மார்ச் 03*

இந்திய வீரர் ரவீந்திர ஜடேஜா 500 விக்கெட்களை வீழ்த்தியதுடன் 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து புதிய மைல் கல்லை எட்டியுள்ளார். இந்த சாதனையை படைத்த 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமையையும் அவர் பெற்றுள்ளார்.

இந்தியா- அவுஸ்திரேலியா அணிகள் இடையேயான 3ஆவது டெஸ்ட் போட்டியிலேயே அவர் இந்த சாதனையை படைத்துள்ளார்.

நேற்று முன்தினம் ஆட்டம் முடிவில் ஜடேஜா 4 விக்கெட்களை கைப்பற்றியிருந்தார். முதல் விக்கெட்டான டிராவிஸ் ஹெட் விக்கெட்டை எடுத்த போது சர்வதேச போட்டியில் 500 விக்கெட்டை தொட்டார்.

500 விக்கெட் வீழ்த்தி, 5 ஆயிரம் ஓட்டங்களை எடுத்து அவர் சாதனை படைத்தார். இத்தகைய சாதனையைப் படைத்த 2ஆவது இந்திய வீரர் என்ற பெருமையை அவர் பெற்றார்.

முதல் வீரர் கபில்தேவ் ஆவார். ஜடேஜா 63 டெஸ்ட்களில் 263 விக்கெட்களும், 171 ஒருநாள் போட்டிகளில் 189 விக்கெட்களும், 64 இருபது -20 போட்டிகளில் 51 விக்கெட்களுமாக மொத்தம் சர்வதேச போட்டியில் 503 விக்கெட் வீழ்த்தியுள்ளார். சர்வதேச போட்டிகளில் 5,527 ஓட்டங்கள் எடுத்துள்ளார்.

சர்வதேச போட்டிகளில் 500 விக்கெட்கள் மற்றும் 5 ஆயிரம் ஓட்டங்களுக்கு மேல் எடுத்த வீரர்கள் விவரம், கபில் தேவ், ரவீந்திர ஜடேஜா (இந்தியா), ஜக் கலிஸ், பொலாக் (தென்னாபிரிக்கா), இம்ரான் கான், வசீம் அக்ரம், அப்ரிடி (பாகிஸ்தான்), இயன் பொதாம் (இங்கிலாந்து), சமிந்த வாஸ் (இலங்கை), டானியல் விற்றோரி (நியூசிலாந்து), ஷகீப் அல் ஹசன் (பங்களாதேஷ்).

# டுபாய் சம்பியன்ஷிப் தொடர் காலிறுதியில் ஜொகோவிச்!



*டுபாய், மார்ச் 03*

நெதர்லாந்து வீரர் தலான் கிரீக்ஸ்பூரை வீழ்த்தியதன் மூலம், ஜொகோவிச் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

டுபாயில் ரென்னிஸ் சம்பியன்ஷிப் தொடர் நடக்கிறது. இதில், ஆண்கள் ஒற்றையர் பிரிவின் இரண்டாவது சுற்றில் சேர்பியாவின் ஜொகோவிச், நெதர்லாந்து வீரர் தலான் கிரீக்ஸ்பூரை எதிர்கொண்டார். இந்த போட்டியில் ஜொகோவிச் 6-2, 6-3 என்ற நேர் செற்களில் கிரீக்ஸ்பூரை வென்றார்.

## 11 சந்தை வியாபாரிகளுக்கு எதிராக யாழ்ப்பாணத்தில் சட்ட நடவடிக்கை!



யாழ்ப்பாணம், மார்ச் 03

யாழ்ப்பாணத்தில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை (தராசுகள்) பயன்படுத்திய 11 வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவின் உத்தியோகத்தர்கள் நேற்று முன்தினம் புதன்கிழமை பண்ணை மீன் சந்தை, நாவாந்துறை மீன் சந்தை, காக்கைதீவு மீன் சந்தை மற்றும் சின்னக்கடை மீன் சந்தை ஆகிய இடங்களில் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

அவ்வேளையில் வியாபாரிகளால் பயன்படுத்தப்பட்ட நிறுக்கும் கருவிகளை பரிசோதித்த போது அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்படாத மற்றும் நடப்பாண்டில் முத்திரை பதிக்கப்படாத நிறுக்கும் கருவிகளை பயன்படுத்திய 11 வியாபாரிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அத்துடன் இனிவரும் காலங்களில் நிறுவை அல்லது அளவை உபகரணங்களைப் வியாபார நோக்கத்திற்காக பயன்படுத்தும் வியாபார நிலையங்களிலும் திடீர் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினர் தெரிவித்தனர்.(அ)

# மீன்வளர்ப்பு எனும் போர்வையில் பேராலையில் மணல் கொள்ளை!

## அப்பகுதி மக்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



**கிளிநொச்சி, மார்ச் .03**

**நன்னீர் மீன் வளர்ப்பு எனும் போர்வையில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக தெரிவித்து பிரதேச மக்கள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.**

கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பேராலை கிராம மக்களே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

அந்த கிராமத்தில் அமைந்துள்ள புதுக்காட்டுக் குளத்திலிருந்தே அதிகளவான மணல் அகழ்வு செய்யப்பட்டு அதிக விலைக்கு விற்பனை செய்யப்பட்டு வருவதாக பிரதேச மக்கள் குற்றம் சாட்டியுள்ளனர்.

நன்னீர் மீன் வளர்ப்பிற்கு குறித்த குளம் அபிவிருத்தி செய்யப்படுவதாக காண்பித்து, அங்கு அகழ்வு மேற்கொள்ளப்படும் மணல் விற்பனை செய்யப்படுவதாக தெரிவித்தே குறித்த பகுதி கமக்கார அமைப்பின் ஏற்பாட்டில் போராட்டம் நேற்று காலை 9 மணியளவில் ஏ-9 வீதியில் இடம்பெற்றது.

ஆர்ப்பாட்டம் இடம்பெற்றவேளையிலும் பெருந்தொகையான மணல் வாகனங்களில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டதை அவதானிக்க முடிந்தது.

குறித்த வாகனங்களை மறித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது அந்தப் பகுதிக்குச் சென்ற சிலர் போராட்டக்காரர்களை அச்சுறுத்தியதுடன், வாகனங்களை செலுத்தி மக்கள் மீது மோதும் வகையில் நடந்து கொண்டனர்.

இதேவேளை, போராட்டம் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் போராட்டக்காரர்களுக்கும், மணணகழ்வில் ஈடுபடும் தரப்புக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றன.

உள்ளூர் திணைக்களங்களுக்கு ஏதும் வழங்கப்படாது, கொழும்பில் உள்ள அதிகாரிகளால் குறித்த பணிக்கான அனுமதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கமநலசேவைகள் திணைக்களத்துக்குச் சொந்தமான அந்த குளத்தின் அபிவிருத்தி தொடர்பில் தகவல் ஏதும் வழங்கப்படவில்லை என கமநல அபிவிருத்தித் திணைக்கள உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்தார்.

இந்த நிலையில், புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கங்கள் பணியகத்தினால் அப்பகுதியில் மண்ணகழ்விற்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆயினும், குறித்த அனுமதி முறையற்றது எனவும், அனுமதிக்கப்பட்ட 4 அடிக்கு மேலாக 12 அடிவரை மண்ணகழ்வு சட்டத்திற்கு முரணாக மேற்கொள்ளப்படுவதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இந்த போராட்டத்தைத் தொடர்ந்து ஜனாதிபதிக்கு எழுதப்பட்ட மகஜர் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர் மூலம் அனுப்பி வைப்பதற்காக பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.சயந்தினியிடம் கையளிக்கப்பட்டது. (அ)

# பொதுச்சுகாதார பரிசோதகர்கள் மட்டக்களப்பு ரயிலில் சோதனை!

## உணவு விடுதி மீது சட்ட நடவடிக்கை



மட்டக்களப்பு, மார்ச் 03

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு செல்லும் ரயிலில் உள்ள உணவு விடுதிக்கு எதிராக பொதுச்சுகாதார பரிசோதகர்களினால் சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

நேற்று முன் தினம் மாலை மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச் செல்ல மட்டக்களப்பு ரயில் நிலையத்தில் தரித்து நின்ற ரயிலில் உள்ள உணவு விடுதி பொதுச்சுகாதார பிரிவினரால் திடீர் சோதனையிடப்பட்டது.

இதன்போது அங்கு மனித பாவனைக்கு உதவாத வகையில் கரப்பான், எறும்புகளுடன் விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த உணவுகள் கைப்பற்றப்பட்டன.

அத்துடன் குறித்த உணவகத்தை நடத்தியவருக்கு எதிராக நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்யவுள்ளதாக பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் தெரிவித்தனர்.

கோட்டைமுனை பிரதேச பொதுச்சுகாதார பரிசோதகர் மிதுன்ராஜ் தலைமையில் பொதுச்சுகாதார பரிசோதகர்களான கிஷான், அமிர்தாப் ஆகியோர் இந்த சோதனை நடவடிக்கையை மேற்கொண்டனர்.

மட்டக்களப்பிலிருந்து கொழும்பு நோக்கிச்செல்லும் ரயிலில் காணப்படும் உணவு விடுதி குறித்து பல்வேறு விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ)

# தேர்தல் விழிப்புணர்வு நாடகம் வவுனியாவில்!




வவுனியா, மார்ச் 03

தேர்தல் தொடர்பான விழிப்புணர்வு வீதி நாடகம் ஒன்று வவுனியா பழைய பஸ் நிலையத்தில் நேற்று காலை இடம்பெற்றது.

தேர்தல் வன்முறைகளை கண்காணிப்பதற்கான நிலையத்தின் ஏற்பாட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது தேர்தல் செலவீனங்களை ஒழுங்குபடுத்தும் புதிய சட்டமூலம் தொடர்பான முழுமையான உள்ளடக்கங்கள் பொதுமக்களுக்கு தெளிவு படுத்தப்பட்டன.

அது தொடர்பான துண்டுப் பிரசுரங்களும் பொதுமக்களுக்கு விநியோகிக்கப்பட்டன. (அ)

# கட்சி சகாக்களிடம் சீறிப்பாய்ந்த பஸில்

கொழும்பு, மார்ச் 03

தேர்தலை எதிர்கொள்வதற்கு முதுகெலும்பு இல்லாவிட்டால், வீடு செல்லுங்கள் என மொட்டு கட்சி உறுப்பினர்கள் சிலரிடம் சீறிப்பாய்ந்துள்ளார் முன்னாள் அமைச்சர் பஸில் ராஜபக்ஷ.

பொதுஜன பெரமுனவின் கூட்டமொன்று அண்மையில் நடைபெற்றது.

உள்ளூராட்சி தேர்தல் நடத்தப்படவேண்டும் என் பதே பஸில் உள்ளிட்ட சில உறுப்பினர்களின் விருப் பமாக இருக்கின்றது. மேலும் சில மொட்டு கட்சி முக் கியஸ்தர்கள், ஐ.தே.கவுடன் இணைந்து தேர்தலை எதிர்க்கின்றனர்.

இதனால் பஸில் கடும் கோபத்தில் உள்ளாராம். இந்நிலையில் மேற்படி கூட்டத்தின்போது தேர்தல் வேண்டாம் என சில உள்ளூராட்சிச் சபைகளின் தவிசாளர்கள் கோரிக்கை விடுத்தனர்.

இவ்வாறு கோரிக்கை விடுத்தவர்களிடம் சீறிப் பாய்ந்துள்ளார் பஸில்.

தேர்தலை எதிர்கொள்வதற்கு முதுகெலும்பு இல்லாவிட்டால், வீடு செல்லுங்கள் என பஸில் அவர்களிடம் கூறியுள்ளார் என தெரிவிக்கப்பட்டது. (அ)

# நல்லூர் வாள்வெட்டு சம்பவம் பிரதான சந்தேக நபர் கைது!

யாழ்ப்பாணம், மார்ச் 03

சிவராத்திரி தினத்தன்று நல்லூர் பின் வீதியில் இடம் பெற்ற வாள்வெட்டு சம்பவத்துடன் தொடர்புடைய 27 வயதுடைய பிரதான சந்தேகநபர் யாழ். மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸ் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 18ஆம் திகதி மகாசிவராத்திரி தினத்தன்று அதிகாலைவேளை நல்லூர் பின் வீதியில் இடம் பெற்ற இந்த வாள்வெட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் தலைமறைவாகியிருந்தார்.

அவரே நேற்று முன் தினம் புதன்கிழமை கைது செய்யப்பட்டார். கைது செய்யப்பட்டவரிடம் இருந்து தாக்குதலுக்கு பயன்படுத்தப்பட்ட வாளும் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த வாள்வெட்டுச் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே மூவர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில் பிரதான சந்தான நபர் கைது செய்யப்பட்டுள்ளார். (அ)

# 15 வீத பெண்களும், 6.3 வீத ஆண்களும் உடல் பருமனால் பாதிப்பு!

கொழும்பு, மார்ச் 03

இலங்கை சனத்தொகையில் 15 சதவீத பெண்களும், 6.3 சதவீத ஆண்களும் உடல் பருமனால் பாதிக்கப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

2015ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது ஆண் மற்றும் பெண் மக்களிடையே அதிக எடை மற்றும் உடல் பருமன் அதிகரித்துள்ளதாக மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்தன தெரிவித்தார்.

உடல் நிறை குறியீட்டெண் அடிப்படையில், உலக சுகாதார அமைப்பின் புள்ளிவிவரங்களின்படி, ஆரோக்கியமான ஒருவரின் பி.எம்.ஐ என்ற உடல் பருமன் கணக்கீடு 18.5 முதல் 24.9 வரை இருக்கவேண்டும்.

30 வயதுக்கும் மேற்பட்டவர்களின் பி.எம்.ஐ 25 முதல் 29.9 இற்கு இடைப்பட்ட பி.எம்.ஐ அதிக எடை கொண்டதாகவும் இருக்கவேண்டும் என மருத்துவ நிபுணர் சாந்தி குணவர்தன தெரிவித்தார். (அ)

## அணுமின்...

அணுசக்தியை பயன்படுத்தி மின் சாரத்தை உற்பத்தி செய்வது தொடர்பான விடயங்களை ஆராய்வதற்காக நடவடிக்கை குழு ஒன்றையும் 9 செயல்பாட்டுக் குழுக்களையும் நியமிக்க அமைச்சரவை கடந்த வாரம் தீர்மானித்தது.

அணு மின் நிலையத்தை நிலப்பரப்பில் அமைப்பதா அல்லது கப்பலில் பொருத்தி கடல்பரப்பில் செயல்படுத்துவதா என்பது தொடர்பாக இதுவரை தீர்மானிக்கப்படவில்லை.

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு அமைய, ரஷ்யாவை சேர்ந்த ஒரு குழு ஊடாக மின் உற்பத்தி நிலையத்தை இயக்குவதற்கும், சுமார் மூன்று வருடங்களுக்குள் இலங்கையில் ஒரு குழுவினருக்கு அதற்கான பயிற்சிகளை வழங்குவதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவின் 'றோசரொம் ஸ்டேட் நியூகிளியர் எனர்ஜி' (Rosatom State Nuclear Energy) நிறுவனம் இதற்கான திட்ட முன்மொழிவை முன்வைத்துள்ளது.

100 மெகாவோட்ஸ் மின்சாரத்தை உற்பத்தி செய்யும் மூன்று சிறிய கடல் அணு மின் நிலையங்களை தேர்ந்தெடுக்கும் சாத்தியம் இலங்கைக்கு உள்ளது என்றும் இலங்கை அணுசக்தி சபை தெரிவித்துள்ளது.

இதற்கான முதலீடுகள், சலுகைக் காலம் மற்றும் திருப்பிச் செலுத்தும் காலம் ஆகியவற்றை நிர்ணயம் செய்வதற்காக பங்களாதேஷுடன் ரஷ்யா செய்துள்ள ஒப்பந்தத்தை இலங்கை தற்போது ஆய்வு செய்து வருவதாகவும் அவர் மேலும் கூறியுள்ளார். (ஐ)

## நீதிமன்ற...

வழிபாடுகளுக்கு இடையூறு விளைவித்தனர் என்று குறிப்பிட்டு பௌத்த பிக்குகள் தொடர்ந்த வழக்கும் நேற்று விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

இதில், பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோரை மன்றில் முற்படுமாறு நீதிவான் ரி. சரவணராஜா உத்தரவிட்டுள்ளார். அத்துடன், இந்த வழக்கு விசாரணைக்காக எதிர்வரும் ஜூன் 08ஆம் திகதிக்கு ஒத்தி வைக்கப்பட்டது.

கடந்த 2022 ஜூன் 12ஆம் திகதி கபோக் கல்லில் அமைக்கப்பட்ட புத்தர் சிலையை நிறுவ நடவடிக்கை எடுக்கப்பட்டது. அப்பகுதியிலுள்ள ஆதி சிவன் ஐயனார் ஆலயத்தை ஆக்கிரமித்து மேற்கொள்ளப்படும் இந்த நடவடிக்கைக்கு மக்கள்கூடி எதிர்ப்பு வெளியிட்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான வினோ நோகராதலிங்கம், செல்வராசா கஜேந்திரன், முன்னாள் வட மாகாணசபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன் மற்றும், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோரும் பங்கேற்றிருந்த னர். இவர்களுக்கு எதிராக பிக்குகள் வழக்கு தொடுத்திருந்தனர்.

இந்த நிலையில், பிக்குகள் அளித்த முறைப்பாட்டை அடிப்படையாகக் கொண்டு இவர்களை விசாரணைக்கு வருமாறு முல்லைத்தீவு பொலிஸார் அழைப்பாணை விடுத்திருந்தனர். இதன்படி, முன்னாள் வட மாகாண சபை உறுப்பினர்களான துரைராசா ரவிகரன், கந்தையா சிவநேசன், சமூக ஆர்வலர் ஜூட் நிக்சன் ஆகியோர் முல்லைத்தீவு பொலிஸ் நிலையம் சென்று தமது வாக்குமூலங்களையும் வழங்கியிருந்தனர். பின்னர் தொடரப் பட்ட வழக்கில் இவர்களுக்கு பிணை வழங்கப்பட்டது.

மேலும், இந்த வழக்கில் சந்தேக நபர்களாக பெயர் குறிப்பிடப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வராசா கஜேந்திரன் மற்றும், வினோ நோகராதலிங்கம் ஆகியோரை மன்றில் முன்னிலையாக உத்தரவிடப்பட்டதுடன், வழக்கை எதிர்வரும் ஜூன் 8ஆம் திகதிக்கும் நீதிவான் ஒத்திவைத்தார். (ஐ)

## '13' தமிழருக்கு...

உங்கள் அரசியல் நிலைப்பாடுகளில் தொய்வில்லாமலும் தெளிவாகவும் இருக்க வேண்டும் என்று கூறியுள்ளார். அதாவது நீங்கள் சில நேரங்களில் 13ஆவது திருத்தச்சட்டத்தற்கு எதிராகவும் மறுநேரங்களில் அதனை முழுமையாக அமுல்படுத்துமாறும் கூறுகின்றீர்களாம். உங்களின் நிலை பற்றி சற்று விளக்க முடியுமா? என்று தன்னிடம் எழுப்பப்பட்ட கேள்விக்கே விக்னேஸ்வரன் பதில் அளித்துள்ளார்.

நீண்ட அந்தப் பதிலின் முக்கிய விடயங்கள் மட்டும் வருமாறு,

தற்போது தமிழ் பேசும் மக்களுக்கு இந்த நாட்டில் இருக்கும் ஒரேயொரு சட்ட ரீதியான வழிமுறை பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் தரப்பட்டுள்ள மாகாண சபையே ஆகும்.

ஆனால், பதின்மூன்றாவது திருத்தச் சட்டம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் பாற்பட்டது. அதன் கீழ் அதிகாரம் சிங்கள மக்கள் தலைவர்களிடமே உள்ளது. எமக்கு பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தின் கீழ் கிடைக்க வேண்டிய காணி, பொலிஸ் அதிகாரங்களைக் கூட இன்று வரையில் நடைமுறைப்படுத்தப்படாது தடுத்து நிறுத்தியுள்ளார்கள்.

13ஆவது திருத்தச்சட்டம் பற்றி நான் வெந்நீருந் தண்ணீருமாகப் பேசி வருவதால் நண்பர் மனோவுக்கு அது புரியவில்லை என்பதே அது. வட, கிழக்குத் தமிழர்களுக்கு தற்போது இருக்கும் ஒரேயோர் அதிகாரபூர்வமான பதின்மூன்றாவது திருத்தச் சட்டத்தைத் தொலைத்தால் சிங்கள ஆக்கிரமிப்பு வட, கிழக்கில் ஆக்ரோஷமாக நிலைபெற்று விடும். ஒரு கூட்டு சமஷ்டி முறை உதயமாகும்வரை பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் எமது அரசியல் யாப்பில் இருந்தே ஆகவேண்டும்.

பதின்மூன்றாவது திருத்தச்சட்டம், இந்தியாவின் உள்ளீட்டால் ஏற்பட்ட சட்ட மாற்றம். நீக்க சிங்கள அரசியல்வாதிகளும் மகா சங்கத்தினரும் நடவடிக்கை எடுக்கும் போதெல்லாம் இந்தியா குறுக்கிடுவதைக் காணலாம். ஆகவே, இந்தியாவின் பின்னணி எமக்குப் பதின்மூன்றாவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த பக்க பலமாக இருந்து வருகின்றது. எப்படியாவது பதின்மூன்றை சிங்கள அரசியலாளர்கள் அகற்றப்பார்க்கும்போது இந்தியா அதற்கு இடம் கொடுப்பதில்லை. ஐ. நாவிலும் பதின்மூன்றாவது திருத்தம் பற்றி இந்தியா குறிப்பிட்டுள்ளது. ஆகவே பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பில் உள்ளடக்கப்பட்டிருந்தாலும், அதனால் தமிழ் மக்களுக்குப் போதிய அதிகாரங்கள் கிடைக்காவிட்டாலும், அதனைத் தற்போதைக்கு முழுமையாக நடைமுறைப்படுத்துவது அவசியம். பதின்மூன்று நீக்கப்பட்டால் வட, கிழக்கு முற்றும் முழுதுமான சிங்கள ஆதிக்கத்துக்கு ஆட்பட்டு விடும். தமிழர்களுக்குச் சார்பான பிறிதோர் அரசியல் யாப்பு வரும் வரையில் பதின்மூன்றை நாங்கள் இறுகப்பற்றிக் கொண்டிருக்க வேண்டும்.

ஆனால், பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் வடகிழக்குத் தமிழ்ப் பேசும் மக்களுக்கு ஒரு தீர்வல்ல. பதின்மூன்றாவது திருத்தச்சட்டம் தற்போது சட்டப்புத்தகத்தில் இருக்கும் போதே காணி அபகரிப்பு நடக்கின்றது. சிங்கள மயமாக்கல் நடக்கின்றது. பௌத்த மயமாக்கல் நடக்கின்றது. இராணுவ கெடுபிடிகள் நடக்கின்றன. தமிழ் பேசும் வட, கிழக்கு மக்கள் தங்களைத் தாங்களே சுயநிர்ணய உரித்தின் அடிப்படையில் ஆண்டு வர வேண்டும் என்றால் கூட்டு சமஷ்டி முறையே ஒரேயோர் அதிசிறந்த தீர்வு என்பதை நாம் மறத்தலாகாது. அதுவரை பதின்மூன்றை நாங்கள் கட்டிக் காக்க வேண்டும். நான் பதின்மூன்றை சாதகமாக விமர்சிப்பதின் சூட்சுமம் இதுதான் - என்றுள்ளது. (ஐ)

# புதிய வரி திருத்தம் ஐ. எம். எவ். வரவேற்பு!

கொழும்பு, மார்ச் 03

ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமைய வேண்டும் என்று சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. அத்துடன், புதிய வரித் திருத்தத்துக்கு இந்த அமைப்பு ஆதரவு தெரிவித்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான கிளை இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

ஏழை மற்றும் பாதிக்கப்பட்ட மக்களை பாதுகாக்கும் வகையிலேயே வரித்திருத்தம் அமையப்பெற வேண்டும் என சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக் கிளையின் சிரேஷ்ட பிரதானி பீற்றர் பிரேயர், சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை கிளையின் தலைமை அதிகாரி மஷாஹிரோ நோசாகி ஆகியோர் இணைந்து இந்த அறிக்கையை விடுத்துள்ளனர்.

அதில், அரசாங்கத்தின் செலவுகளை ஈடு செய்வதற்கு புதிய வருமான வரி உதவி செய்யும். சர்வதேச நியமங்களுக்கு அமையவே புதிய வருமான வரி அமைந்துள்ளது. புதிய வரி சீர்திருத்தம் தற்போதுள்ள நிலைமையை சீர் செய்ய உதவும் எனவும் அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. (ஐ)

# வரி விதிப்பு தளர்த்தப்படாது

## இராஜங்க அமைச்சர்

கொழும்பு, மார்ச் 03

அரசியல் நோக்கங்களுக்காக நிலையான வேலைத்திட்டத்தை சீர்குலைக்க முயற்சிக்கின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க தெரிவித்துள்ளார்.

எந்தவொரு நிலையிலும், வரி விதிப்பை பின்நோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும் அவர் கூறியுள்ளார்.

நேற்று செய்தியாளர்களுக்கு அவர் கருத்து வெளியிட்டபோதே இதனைத் தெரிவித்தார். (ஐ)

## நெருக்கடியில்...

குறைந்த வருமானம் பெறும் நாடுகளின் கடன் பிரச்னையை தீர்ப்பதில் முக்கிய பங்காற்ற சீனா தயாராகவுள்ளது என்றும் பிரதமர் மேலும் தெரிவித்தார். (ஐ)

## கஞ்சா...

குறைந்தவர்களாவர்.

கைது செய்யப்பட்ட வர்களிடமிருந்து ஒரு தொகை கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாகவும் கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர். (ஐ - 03)

## இலங்கை...

செயலகத்தில் இந்த சந்திப்பு நடைபெறும்.

இந்திய - இலங்கை மீனவர்களிடையே ஏற்பட்டுள்ள மோதல் போக்கு தீவிரமடைந்துள்ள நிலையில் இந்த சந்திப்பு ஏற்பாடாகியுள்ளது.

இதேவேளை, இந்த சந்திப்புக்கு வடக்கிலுள்ள பெரும்பாலான பாரம்பரிய முறையிலான மீனவர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். அத்துடன், இந்த சந்திப்பில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லையென அவர்கள் தெரிவித்துள்ளனர். (ஐ)

## வியட்நாமில்...

சர்வதேச அமைப்பு முன்னெடுத்து வருவதாக வெளிவிவகார அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

வியட்நாமில் தற்போது 152 இலங்கை அகதிகள் தங்கவைக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்கான அன்றாட தேவைகளை ஐக்கிய நாடுகளின் அகதிகளுக்கான உயர்ஸ்தானிகராலயம் முன்னெடுத்து வருகிறது.

இந்நிலையில், இலங்கைக்கு திரும்பி வர இணக்கம் தெரிவிக்காத 130 பேரும் , அகதிகளுக்கான சர்வதேச அமைப்பு ஊடாக மூன்றாம் தரப்பு நாடுகளிடம் தீர்வை கோரியுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

வியட்நாமின் ஹனோயில் உள்ள இலங்கை தூதரகம், இந்த விடயம் தொடர்பில், யு. என். எச். சி. ஆர் மற்றும் ஐ. ஓ. எம். ஆகிய இரண்டு அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகின்றது என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## கட்சித்...

சீ. வீ. கே. சிவஞானத்தை தொடர்பு கொண்டு கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அத்துடன், தாம் ஒருபோதும் கட்சியின் தலைவர் மாவை சேனாதி ராசாவை தரக்குறைவாக எந்த இடத்தி லும் திட்டவோ அல்லது விமர்சிக்கவோ இல்லை. மேலும், அறிக்கை ஒன்றை வெளியிட்ட பின்னர் அரசியலிலிருந்து ஒதுங்கப்போவதாக வெளியான தகவல்களையும் அவர் அடியோடு மறுத்துள்ளார். (ஐ)

## கடலட்டை...

இதனைத் தெரிவித்தார்.

வடக்கில் தற்போது 1700 கடலட்டை பண்ணைகள் வந்துள்ளன என்றும் கடலட்டை மூலம் கடந்த ஆண்டு கிடைத்த வருமானத்தை இந்த ஆண்டு இறுதிக்குள் மூன்று மடங்காக அதிகரிப்பதே தனது நோக்கம் என்றும் அமைச்சர் மேலும் கூறினார். (ஐ)

## குழந்தைகளுக்கு...

மாதங்களுக்கு இடையில் சராசரி குடும்ப செலவு 18 வீதமாக அதிகரித்துள்ளது. இந்தக் காலகட்டத்தில் குடும்பங்களில் 23 வீத அதிகரிப்பு ஏற்பட்டது. பெரும்பாலான அல்லது அனைத்து அடிப்படை தேவைகளையும் பூர்த்தி செய்ய முடியாது போனதாகவும் 9 மாவட்டங்களில் உள்ள 2,308 குடும்பங்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், பெண்கள் கடத்தல் அல்லது சுரண்டல், கூடுதல் நேரம் வேலை செய்வது மற்றும் சில சந்தர்ப்பங்களில் வேலைக்காக இடம்பெயர்வது போன்ற சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இதனால், குழந்தைகள் தனிமையில் விடப்பட நேருவதால், அவர்களுக்கு ஆபத்து ஏற்படும் என்றும் அந்த அமைப்பு சுட்டிக்காட்டியுள்ளது.

அரைவாசி குடும்பங்கள் தங்கள் குழந்தைகளின் உணவு உட்கொள்ளும் அளவைக் குறைப்பதாகக் கூறினாலும், 27 வீதமானவர்கள் தங்கள் குழந்தைகளுக்கு உணவளிப்பதற்காக தாங்கள் உணவைத் தவிர்ப்பதாகக் கூறியுள்ளனர். பத்தில் ஒன்பது குடும்பங்கள் தங்கள் குழந்தைகளுக்கு போசாக்கான உணவுக்கு உத்தரவாதம் அளிக்க முடியாது என்று கூறியுள்ளன - என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# உள்ளூராட்சித் தேர்தலை நடத்தக் கோரி பிரேரணை

## பாராளுமன்றில் வாக்கெடுப்பு நடத்த திட்டம்

கொழும்பு, மார்ச் 03

**உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திவைப்பு உட்பட அத்தேர்தல் சம்பந்தமாக பாராளுமன்றத்தில் இரு நாட்கள் விவாதம் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.**

**இதன்படி எதிர்வரும் 9 மற்றும் 10 ஆம் திகதிகளில் குறித்த விவாதம் நடத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. விவாதத்தின் முடிவில் வாக்கெடுப்பு நடத்துவதற்கும் இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று விசேட கட்சித் தலைவர்கள் கூட்டம், சபாநாயகர் அலுவலகத்தில் நடைபெற்றது.

நிதி அதிகாரம் பாராளுமன்றத்துக்கு இருப்பதால், தேர்தலுக்கான நிதியை பெற்றுக்கொடுப்பதற்கு தலையிடுமாறு கோரி சபாநாயகருக்கு, தேர்தல் ஆணைக்குழு அனுப்பிய கடிதம் பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது.

அவ்வேளையிலேயே தேர்தல் சம்பந்தமாக விவாதிக்க இரு நாட்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

விவாதத்தின் முடிவில் தேர்தலை நடத்துவதற்கு நிதி வழங்கப்படவேண்டும் என்ற யோசனை எதிரணியால் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்டு, வாக்கெடுப்புக்கு விடப்படவுள்ளது. (அ)

# கச்சதீவு அந்தோனியார் திருவிழா இன்று ஆரம்பம்!



யாழ்ப்பாணம், மார்ச்

கச்சதீவு அந்தோனியார் ஆலய பெருவிழா இன்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகவுள்ள நிலையில் அது தொடர்பான அனைத்து ஏற்பாடுகளும் நிறைவு பெற்றுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அ.சிவபாலசுந்தரன் தெரிவித்தார்.

2023ஆம் ஆண்டுக்கான கச்சதீவு புனித அந்தோனியார் ஆலய திருவிழா யாழ்ப்பாண மாவட்ட செயலாளரின் ஒருங்கிணைப்பில் யாழ். ஆயர் இல்லம், இலங்கை கடற்படை, நெடுந்தீவு பிரதேச செயலகம் உள்ளிட்ட சம்பந்தப்பட்ட சகல திணைக்களங்களின் முழுமையான ஒத்துழைப்புடன் இன்று வெள்ளிக்கிழமை மற்றும் நாளை சனிக்கிழமை ஆகிய தினங்களில் நடைபெறவுள்ளது.

கச்சதீவு உற்சவத்தில் கலந்து கொள்ளும் பக்தர்களுக்கான இன்றைய இரவு உணவு, நாளை காலை உணவு மற்றும் மீள் பயணத்திற்கான சிற்றுண்டி என்பன வழங்குவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதேவேளை இன்று யாழ்ப்பாணம்-குறிகாட்டுவான் பஸ் சேவைகளும் , குறிகாட்டுவான் - கச்சதீவு படகு சேவைகளும் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன. (அ)

# தேர்தல் ஒத்திவைப்பு குறித்து விசாரணை நடத்தவுள்ள மனித உரிமை ஆணைக்குழு

கொழும்பு, மார்ச் 03

உள்ளூராட்சிச் சபைத் தேர்தல் ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பில் விசேட விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் பல முறைப்பாடுகள் முன்வைக்கப்பட்டுள்ளதாக அதன் பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்.

குறித்த முறைப்பாடுகளின் அடிப்படையில் இந்த விசாரணையை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

இதன் ஆரம்ப கட்ட விசாரணைகளுக்கு தேர்தல்கள் ஆணைக்குழுவின் உறுப்பினர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் கூறினார்.

எனினும், உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தொடர்பான நீதிமன்ற நடவடிக்கைகள் தொடர்வதன் காரணமாக விசாரணைகளுக்காக வேறொரு திகதியை வழங்குமாறு தேர்தல்கள் ஆணைக்குழுவினால் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டார். (அ)

# மருமகன் தாக்கி மாமி மரணம்! படுகாயமடைந்தார் மனைவி!!

## வவுனியாவில் நேற்று காலை பயங்கரம்

வவுனியா, மார்ச் 03

வவுனியா பெரிய உலுக்குளம் பகுதியில் மருமகனின் தாக்குதலுக்குள்ளாகி மாமியார் சம்பவ இடத்திலேயே பலியாகியதுடன், மனைவி படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுக் காலை இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நேற்றுக் காலை கணவனுக்கும் மனைவிக்கும் இடையில் வாக்குவாதம் இடம்பெற்றுள்ளது. அது முற்றிய நிலையில் வீட்டில் இருந்த கோடரி மற்றும் கத்தியை கொண்டு கணவன் மனைவி மீது தாக்குதல் நடத்தினார்.

இதனைத் தடுக்கச் சென்ற மனைவியின் தாயார் மீதும் கடுமையான தாக்குதலை மேற்கொண்டார். இதனால் தலையில் பலத்த காயமடைந்த மனைவியின் தாயார் சம்பவ இடத்திலேயே பலியானார். படுகாயமடைந்த மனைவி கவலைக்கிடமான நிலையில் வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

சம்பவத்தில் பெரியஉலுக்குளம் பகுதியை சேர்ந்த டி.பி.அமராவதி (வயது-60) என்ற பெண் பலியானதுடன் அவரது மகளான துலிகா ரத்தினசிறி (வயது-37) படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அவருக்கு இரு பிள்ளைகள் உள்ளனர். தாக்குதலை முன்னெடுத்த நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.



சம்பவம் தொடர்பாக உலுக்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ)

# நலன்புரிக் கொடுப்பனவுகளுக்கான விண்ணப்ப திகதி இம்மாதம் நிறைவு

கொழும்பு, மார்ச் 03

சமுர்த்தி உள்ளிட்ட ஏனைய நலன்புரி கொடுப்பனவுகளுக்கு விண்ணப்பித்துள்ளவர்களுக்கான கணக்கெடுப்பு இந்த மாதம் 31ஆம் திகதியுடன் நிறைவு பெறவுள்ளது.

நலன்புரி பயன்பாட்டுச் சபையின் தலைவர் பீ.விஜயரத்ன இதனைத் தெரிவித்தார்.

37 இலட்சத்து 20 ஆயிரம் பேர் நலன்புரி கொடுப்பனவுக்காக விண்ணப்பித்துள்ளனர். இந்த நிலையில், இதுவரை 80 ஆயிரம் குடியிருப்புக்களில் கணக்கெடுப்பு நடத்தப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், கணக்கெடுப்பு காலம் நிறைவடைவதற்கு முன்னர் தமது தரவுகளை வழங்கத் தவறினால் இதன்மூலம் கிடைக்கும் பலன்களை இழக்க நேரிடும் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, உரிய அதிகாரிகளுக்கு சரியான மற்றும் உண்மையான தகவல்களை வழங்குமாறும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (அ)

# கோவிட் தொற்றின் பின் நாட்டுக்கு வந்த முதலாவது சீன சுற்றுலா பயணிகள் குழு

கொழும்பு, மார்ச் 03

கோவிட்-19 வைரஸ் தொற்றுக்கு பின்னர் முதல் தடவையாக சீனச் சுற்றுலாப் பயணிகள் சிலரை ஏற்றிய ஸ்ரீலங்கன் விமான சேவையின் விமானமொன்று நேற்று முன்தினம் இரவு கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தது. குறித்த சுற்றுலாப் பயணிகள் சீனாவின் குவான்ஸ் நகரிலிருந்து நாட்டை வந்தடைந்துள்ளனர்.

குறித்த சுற்றுலாப் பயணிகளை வரவேற்பதற்காக சுற்றுலாத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ, வெளிவிவகார இராஜாங்க அமைச்சர் தாரக பாலசூரிய மற்றும் இலங்கைக்கான சீனத் தூதுவர் உள்ளிட்ட தரப்பினர் கட்டுநாயக்க விமான நிலையத்திற்குச் சென்றிருந்தனர். (அ)

# சட்டவிரோத கடற்றொழிலை கட்டுப்படுத்த தொண்டரணி

## அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தீர்மானம்

யாழ்ப்பாணம், மார்ச் 03

சட்ட விரோத கடற்றொழில் செயற்பாடுகளை கட்டுப்படுத்தும் நோக்கில் தொண்டர் அணி ஒன்றை உருவாக்க உள்ளதாக கடற்தொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முன்னாய்த்த கூட்டம் நேற்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு தலைவர் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் இடம்பெற்றது.

இதன்போதே மேற்குறித்த தீர்மானம் எடுக்கப்பட்டது. அத்தோடு போதைப்பொருள் பாவனைப் பரவலைக் கட்டுப்படுத்த பொலிஸாரின் சிவில் பாதுகாப்புக் குழுக்களைப் பலப்படுத்தி பிரதேச ரீதியாக நடவடிக்கை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

அதேவேளை கச்சதீவு அந்தோனியார் தேவாலய உற்சவத்துக்கான ஏற்பாடுகள் மற்றும் பக்தர்களுக்கான போக்குவரத்து ஒழுங்குகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் யாழ்.மாவட்ட செயலர் அ.சிவபாலசுந்தரன், மேலதிக மாவட்ட செயலர்களான ம.பிரதீபன், எஸ்.முரளிதரன், திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், முப்படையினர் கலந்துகொண்டனர். (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 03.03.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.